ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

11.05.2011 - மலர் 08, இதழ் 10



## இலங்கையில் நீதிமன்ற அமைப்பு முறைகள்

## றப்பர் இவ்வாறுதான் உருவாகின்றது

## மூளை வளர்ச்சி மிக்க 'எண்டிலோப்'

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## முன்வைக்கப்பட்ட புதிய நிபந்தனைகள்

கண்டிக்குச் சென்ற கட்டளைத் தளபதியை கொழும்புக்கு ஒல்லாந்தர் வரவழைத்தனர். இதற்கிடையில் கண்டியில் நிறுத்தப்பட்டிருந்த ஒல்லாந்தரின் எஞ்சிய படை அணியை கண்டி மக்கள் சுற்றி வளைத்தனர். இதனால், அவர்கள் உதவியின்றித் தனிமைப்படுத்தப்பட்டதுடன், பல ஒல்லாந்த வீரர்களும். சுகயீனமுற்றனர். இவ்வாறு ஒன்பது மாதங்கள் அவர்கள் சுற்றிவளைக்கப்பட்டிருந்தனர். இக்காலகட்டத்தினுள் ஒல்லாந்தப் போர் வீரர்கள் பெரும் துன்ப, துயரங்களுக்கு முகம்கொடுத்தனர். இந்நிலையை சாதகமாகப் பயன்படுத்திய கண்டி மக்கள் ஒல்லாந்த படை அணிகளை கடுமையாகத் தாக்கினர். இதனை எதிர்கொள்ள முடியாத படையினர் கொழும்பு நோக்கிப் பின்வாங்கினர். இதனால், ஒல்லாந்தரின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை.

இதனையடுத்து, புதிய ஆள்பதியாக நியமிக்கப்பட்ட '்ஃபோக்' என்பவர் யுத்தத்தில் வெல்ல முடியாததை அழுத்தங்களின்மூலம் வெல்ல முயன்றார். இதன் பிரகாரம் யுத்தத்தினால் இதுவரை காலமும் பாதிப்படைந்திருந்த விவசாயப் பிரதேசங்களில் மேலும் கஷ்டத்தை ஏற்படுத்தும் பொருட்டு ஒல்லாந்தப் படையினர் அப்பகுதிகளுக்குள் பிரவேசிக்க முயன்றனர். குறிப்பாக திருகோணமலை மற்றும் புத்தளம் ஊடாகவே இவ்வாறு ஊடுருவ முயன்றனர். அதனால், எல்லைப்புறக் கிராமங்கள் மக்கள் நடமாட்டமின்றிப் பாழடைந்தன. இக்காரணத்தால் மன்னன் சமாதானத்தை விரும்பினான். அதுகுறித்து கலந்துரையாட தூதுவர் ஒருவரை கோட்டைக்கு அனுப்பினான்.

ஆள்பதி ்ஃபோக், மன்னனின் இயலாமையை அறிந்துகொண்டார். மக்களுக்குப் பாதகமான சில நிபந்தனைகளை விதித்தார். தூதுவரும் அதனை ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த நிபந்தனைகளில், மன்னன் தனது சகல உரிமைகளையும் கைவிட்டு, மாத்தறை, காலி, கொழும்பு, யாழ்ப்பாணம், கற்பிட்டி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களையும் இலங்கையின் ஏனைய கரையோரப் பிரதேசங்களையும் ஒல்லாந்த வர்த்தக சங்கத்திடம் கையளிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு மொழிகளைப் பேசும் 'ஹய்போ'



ஆறு மொழிகளைப் பேசக்கூடிய 'ரொபோ' ஒன்றை சீனாவின் சீஜியேங் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் வடிவமைத்துள்ளனர். ஒரு வரவேற்பாளராக செயற்படுத்தும் நோக்கிலேயே இந்த ரொபோவை அவர்கள் வடிவமைத்துள்ளனர். இதற்கு 'ஹய்போ' (Haibao) என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

1.55 மீற்றர் உயரமுடைய இந்த ரொபோ, ஆறு மொழிகளில் பேசும் திறனுடையதாகவும் விருந்தாளிகளை கைகுலுக்கி வரவேற்கக்கூடியதாகவும் உள்ளது. தவிர, அதன் முகத்தில் பொருத்தப்பட்டுள்ள கெமராவினால் விருந்தாளிகள் விரும்பினால் புகைப்படம் பிடித்துக்கொள்ளவும் முடியும். அத்துடன்; ஜோக் சொல்லுதல், நடனமாடுதல், புதிர்களைக் கூறுதல், சந்தேகங்களைத் தீர்த்துவைத்தல் போன்ற பல்வேறு திறமைகளையும் இது கொண்டுள்ளது.





கடந்த வருடம் சீனாவின் ஷங்காய் நகரில் இடம்பெற்ற 'World Expo 2010' எனும் கண்காட்சியிலேயே இந்த ரொபோ முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த கண்காட்சி நிகழ்வுக்காக 'Haibao' ரகத்திற்குரிய 37 ரொபோக்கள் உருவாக்கப்பட்டிருந்தன. இந்த ரொபோக்களின் ஊர்வலம் மற்றும் விசேட காட்சிகளும் இதன்போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இந்தக் கண்காட்சியைப் பார்வையிட வந்த பார்வையாளர்களை இந்த ரொபோக்கள் கனிவுடன் வரவேற்றதோடு, தமது திறமைகளை அவர்களிடையே வெளிப்படுத்தி அவர்களைக் குதூகலப்படுத்தவும் தவறவில்லை.

ஜீநு

## மொறட்டுவை பல்கலைக்கழக பொறியியல் பீட தமிழ்ப் பிரிவு மாணவர்கள் நடாத்தும்

# க.பொ.த. உ/தர மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை



மொறட்டுவை பல்கலைக்கழக பொறியியல் பீட தமிழ்ப் பிரிவு மாணவர்கள், 2011 உயர்தரப் பரீட்சையில் இணைந்த கணிதம், உயிரியல், பௌதிகவியல், ரசாயனவியல் ஆகிய பாடங்களுக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மன்னார், மலையகம் மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் ஒரே நேரத்தில் மேற்குறிப்பிட்ட பாடங்களுக்கான முன்னோடிப் பரீட்சை ஒன்றை நடாத்த ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பழைய, புதிய பாடத்திட்டங்களுக்கு அமைவாக இருவேறு பரீட்சைகள் நடாத்தப்படவுள்ளன. இந்த முன்னோடிப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் யாவும் இலங்கையின் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் பிரபல ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்டதாகும். இப்பரீட்சை இம்மாதம் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. விரும்பிய மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றலாம் எனவும் மேற்படி பரீட்சை தொடர்பான சகல பொறுப்பும் உரிமையும் மொறட்டுவை பல்கலைக்கழக பொறியியல் பீட தமிழ்ப் பிரிவு மாணவர்களுக்கே உரியது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலதிக விபரங்களுக்கு **என். மனோஜ்** 077-8261277, **கே.ராஜ்குமார்** 077-6031545 ஆகியவர்களுடன் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களுக்கு 3 மாதகால பயிற்சி



இவ்வருடத்திலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுகின்ற சகல மாணவர்களுக்கும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பிலான 3 மாதகால பயிற்சியை வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி, 2010 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து, இம்முறை பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்படுகின்ற மாணவர்களுக்கு எதிர்வரும் ஜூலை மாதத்திலிருந்து செப்டெம்பர் மாதம் வரை மூன்று மாதகால பயிற்சிப் பாடநெறியொன்று நடாத்தப்படவுள்ளதாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.

தகவல் தொழில்நுட்பப் பயிற்சிக்கு மேலதிகமாக ஆங்கில மொழி அறிவு மற்றும் திறன் விருத்தி முறைகளும் இந்த கற்கைநெறியில் உள்ளடங்குவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். இந்தப் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துவதற்கு பாடசாலைக் கட்டடங்களை பயன்படுத்தவுள்ளதாகவும் பாடநெறியில் கலந்துகொள்ளும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஆதிவாசிகளின் பிள்ளைகளுக்கு ஆங்கில வகுப்புக்கள்

இலங்கையின் ஆதிவாசிகளாகக் கருதப்படும் வேடுவர்களின் பிள்ளைகளுக்கு ஆங்கில அறிவினை வழங்கும் பொருட்டு ஆங்கில வகுப்புக்களை நடாத்த மகியங்கனை மனித உரிமைக்கான மேம்பாட்டு அமைப்பினர் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



மகியங்கனை-தம்பானை வேடுவ ஆரண்ய நிலையத்திலேயே இந்த ஆங்கில வகுப்புக்கள் நடைபெறுகின்றன. வேடுவர்களின் பிள்ளைகளுக்கான இந்த விசேட ஆங்கில வகுப்புக்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பிற்பகல் 1 மணியிலிருந்து மாலை 5 மணிவரை நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. விசேட பாடநெறியொன்றிற்கமைய இந்த வகுப்புக்கள் இலவசமாக நடாத்தப்படுவதாக மகியங்கனை மனித உரிமைக்கான மேம்பாட்டு அமைப்பினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

விஜய்
Vijey විජය
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# தமிழ் மொழிமூல பாடசாலை ஆசிரிய வெற்றிடங்களுக்கான நேர்முகப் பரீட்சை விரைவில்...



மேல் மாகாணத்திலுள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்னர் நடைபெறும் எனவும் நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக்கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் அறியக்கிடைக்கின்றது.

தமிழ் மொழிமூல பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேல் மாகாண அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அதற்கமைய, ஏராளமானோர் விண்ணப்பித்திருந்தபோதும் நீண்டகாலமாக உரிய பதில்கள் கிடைக்காமையினால், விண்ணப்பதாரர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர். எனினும், தவிர்க்க முடியாத சில காரணங்களாலேயே நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டதாகவும் அதற்கான ஏற்பாடுகள் துரித கதியில் இடம்பெறுவதாகவும் இம்மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்னர் நேர்முகப் பரீட்சை இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

30 நாட்களைக் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
பாடநெறியில் இணையும் எல்லோருக்கும் இவைகள் வழங்கப்படும்
பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.


10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று
Dialog Sim Card ஒன்று Video cd வழிகாட்டி புத்தகம் / அடையாள அட்டை
Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லோம் வழங்கப்படும்.
எமது Diploma சான்றிதழ் உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20% பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையில் நீதிமன்ற அமைப்பு முறைகள்



பாடசாலை மாணவர்கள் மாத்திரமன்றி பொதுமக்கள் அனைவரும் சட்டத்துறை பற்றி அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். சட்டத்தில் முக்கிய ஒரு பிரிவுதான் நீதிமன்ற நடைமுறையாகும். பொதுவாக சட்டமானது, ஒரு நாட்டில் உரிய முறையில் அமுல்படுத்தப்படுமாயின் மக்கள் அதற்குரிய வகையில் நடந்துகொள்வார்கள். அத்துடன், சட்டமும் மனிதனும் இணைகின்றபோதே பலம் அதிகரிக்கும். அந்த அடிப்படையில் சட்டத்தைப் பேணுவதற்கென, நீதிமன்ற அமைப்பு முறைகள் உள்ளன. இலங்கையைப் பொறுத்தளவில் நீதிமன்ற அமைப்பு முறையானது வரலாற்று அடிப்படையில் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு;

1. கி.பி. 1505 ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதி.
2. போர்த்துக்கேயர் ஆட்சிக்காலம் (1505- 1660)
3. ஒல்லாந்தர் காலப்பகுதி (1660-1796)
4. பிரித்தானியர் காலப்பகுதி (1796 - 1948)

## முந்திய காலப்பகுதி

கிராமசபை என்கிற உயர்சபை ஒன்றை முதன்முறையாக இலங்கையை ஆண்ட (கி.மு.377-307) பண்டுகாபய மன்னன் ஏற்படுத்தினான். இச்சபையின் ஊடாக, கிராமத்திற்கான சட்டம், சமாதானம், மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் போன்ற விடயங்களை இச்சபை நிறைவேற்றியதாக கல்வெட்டுக்கள் சான்று பகிர்கின்றன. தொடர்ந்து போர்த்துக்கேயரின் ஆளுகையின்கீழ் இவை பாதிக்கப்பட்டன. ஆயினும், சரியான நீதிமன்ற அமைப்புக்களை இவர்கள் ஏற்படுத்தவில்லை. தொடர்ந்து நாட்டின் முழுக் கரையோரத்தையும் கைப்பற்றிய ஒல்லாந்தர்களே உரோம-ஒல்லாந்த (Roman -Duth Law) சட்டத்தை ஆரம்பித்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து லான்ட்றாத் (Landraad), சிவில்றாத் (Civilraad) றாத்வான் ஜஸ்ரிரியா (Raadvan Justitia) எனப்படுகின்ற நீதிமன்ற அமைப்பு முறைகளையும் ஏற்படுத்தியிருந்தனர்.

எனினும், காலப்போக்கில் நாடு முழுவதும் ஆட்சியை ஏற்படுத்திய ஆங்கிலேயர் 1815 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாரிய மாற்றத்தை நீதிமன்ற முறைமையில் ஏற்படுத்தினர். இந்த நடைமுறைகள் 1948 ஆம் ஆண்டு வரை அதாவது, இலங்கை சுதந்திரம் அடையும்வரை காணப்பட்டது.

## தற்கால நீதிமன்ற முறைகள்

தற்காலத்தில் நீதிமன்ற அமைப்பு முறையானது ஆறு பிரதான பகுதிகளைக் கொண்டமைந்ததாக காணப்படுகிறது. அவை பின்வருமாறு

- ✸ உயர்நீதிமன்றம்
- ✸ மேன்முறையீட்டு நீதிமன்றம்
- ✸ மேல் நீதிமன்றம்
- ✸ மாவட்ட நீதிமன்றம்
- ✸ நீதவான் நீதிமன்றம்
- ✸ ஆரம்ப நீதிமன்றம்

## உயர் நீதிமன்றம் (Supreme Court)

இலங்கையைப் பொறுத்தளவில் மிகவும் உயர்ந்ததும் இறுதியுமான நீதிமன்றமாக காட்சி தருவது உயர் நீதிமன்றமாகும். இது கடந்த 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பில் 120 ஆம் உறுப்புரையில் காணப்படும் சட்டவிதிகளுக்கமைவாக, பின்வரும் அதிகாரங்களுக்கு உரித்துடையனவாகக் காணப்படுகின்றன.

1. அரசியலமைப்புக்கு பொருள் வரைவிலக்கணம் கூறும் அதிகாரங்கள்.
2. இறுதியாகவுள்ள மேன்முறையீட்டு நீதிமன்ற அதிகாரங்கள்.
3. ஜனாதிபதி தொடர்பாகவுள்ள ஆலோசனை வழங்கும் நீதிமன்ற அதிகாரங்கள்.
4. நாடாளுமன்றத்தினால் கட்டளையிடப்படும் விடயங்கள் தொடர்பாக துணைச்சட்டங்களை தயாரிப்பதற்கான அதிகாரங்கள்.
5. நாடாளுமன்ற சிறப்புரிமைகளை மீறுதல் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்கள்.
6. அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்கள்.
7. ஜனாதிபதி தேர்தல் மற்றும் கருத்துக் கணிப்புக்கான மனுக்களை விசாரணை செய்கின்ற அதிகாரங்கள்.
8. விசேட சந்தர்ப்பங்களில் கட்டளை (Writ) வழங்கும் அதிகாரங்கள் என்பனவாகும்.







## மேன்முறையீட்டு நீதிமன்றம் (Court of Appeal)

இலங்கையில் செயற்படுகின்ற இரண்டாவது உயர்நீதிமன்றம் இதுவாகும். இதற்கான அதிகாரங்கள் 1978 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பின் 138-145 ஆம் உறுப்புரைகளில் காணப்படுகிறது. அதற்கமைவாக, இதற்கான அதிகாரங்கள் பின்வருமாறு அமைந்துள்ளன.

1. மேன்முறையீட்டு நீதிமன்ற அதிகாரங்கள்.
2. திருத்தங்கள் கொண்டு வருவதற்கான நீதிமன்ற அதிகாரங்கள்.
3. Writ கட்டளைகளை வழங்குகின்ற அதிகாரங்கள்.
4. தேர்தல் வாக்களிப்புத் தொடர்பான மனுக்களை விசாரிக்கும் அதிகாரங்கள்.
5. நீதிமன்றத்திற்கு அவதூறு விளைவித்தமை தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்கின்ற அதிகாரங்கள்.



## மேல் நீதிமன்றம் (High Court)

இலங்கையில் செயற்படுத்தப்படும் முதற்கட்ட குடியியல் நீதிமன்ற அதிகாரங்களை செயற்படுத்துகின்ற ஒரு நீதிமன்றமாக இதனைக் கூறலாம். இங்கு பின்வரும் விடயங்கள் முக்கியத்துவம் வாய்ந்தனவாக காணப்படுகின்றன.

✸ சகல பாரதூரமான குற்றவியல் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்து குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குதல்,மரண தண்டனை வரையிலான ஏதாவது சட்டபூர்வமான தண்டனையை வழங்குவதற்கும் இந்த நீதிமன்றத்தால் முடியும்.

✸ மேல் நீதிமன்றத்தின் முன்னிலையில் ஜூரி சபையுடன், ஜூரி சபையின்றி அல்லது மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் ஜூரிமார் இல்லாத நீதிமன்ற (Trialat Bar) வழக்குகளையும் விசாரிக்க முடியும்.

✸ பிணைக்குரிய கட்டளைகளை வழங்குவதும், மற்றும் அவசரகால சட்டவிதிகளை மீறியது தொடர்பான வழக்குகளை விசாரணை செய்கின்ற அதிகாரங்களும் இம்மன்றத்திற்குண்டு.

## இங்கு முக்கியமான விடயம் யாதெனில்...

1994 ஆம் ஆண்டின் 154 ஆம் இலக்கம் கொண்ட மாகாணம் சார்ந்த மேல் நீதிமன்றம் என புதிய நீதிமன்றங்களை நாடு முழுவதும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தினால் அமைக்கப்பட்டுள்ளது. அவை தமக்குரிய அதிகாரங்களாக கீழ்வரும் அதிகாரங்களைக் கொண்டுள்ளன.

1. மாகாணத்தினுள் அமைக்கப்பட்டுள்ள நீதவான் நீதிமன்றத்தினால், ஆரம்ப நீதிமன்றத்தினால், தொழில் நியாய சபையினால் அல்லது கமத்தொழில் சேவை சபையினால் வழங்கப்படுகின்ற கட்டளைகளுக்கு, நியாயங்களுக்கு எதிராக சமர்ப்பிக்கப்படுகின்ற மேன்முறையீடுகளை விசாரணை செய்தல்.

(15ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி

## முகாமைத்துவம் - 54

### கற்றலுக்கான ஆலோசனைகள்



# மாணவர்களிடையே தலைமைத்துவப் பண்பு

*(கடந்த வாரத் தொடர்ச்சி)*

ஒரு மாணவர் தலைவர் பொறுப்பை ஏற்கும்போது, அவர் பின்வரும் தகைமைகளைப் பெற்றிடல் வேண்டும். அவையாவன;

1. தொழில்நுட்பத் திறனும் முகாமைத்துவ அனுபவமும்.
2. குழுவின் குறிக்கோள் பற்றிய பூரண அறிவு.
3. குழு உறுப்பினர்களிடையே நம்பிக்கையாளராக மதிக்கப்படல்.
4. இலக்கை அடைவதற்கு குழுவிற்கு ஒத்துழைப் பாயிருத்தல்.
5. சரியான நீதி வழங்குபவராக இருத்தல்.
6. பக்கச்சார்பற்றவராக இருத்தல்.
7. இலக்கிலேயே கண்ணாக இருத்தல்.
8. அனுபவசாலியாக இருத்தல்.
9. செய்து முடித்தவற்றை ஏனையவர்களுக்கு எடுத்துக் காட்டல்.

பாடசாலைக் கல்வியை ஒரு மாணவர் முடித்த பின்னர், பல்கலைக்கழகத்திற்கோ அல்லது தொழிலுக்கோ தன்னை முழுமையாக ஈடுபடுத்தும் நிலைக்கு ஆளாவார். அந்நிலையில், பல்கலைக்கழகத்தில் நடக்கும் கல்வி தொடர்பான செயல்முறைக்கோ அல்லது மாணவ நிர்வாகத்திற்கோ தலைமைத்துவம் என்பது மிக அவசியமாகின்றது. அவ்வாறே, ஒரு காரியாலயத்திற்குச் சென்று வேலை பார்க்க வேண்டிய நிலை வந்தாலும் தலைமைத்துவம் என்பது காரியாலய ஒழுங்குமுறைக்கு மிகவும் அவசியமானதாகும். எனவே, இதற்காக, மாணவர் ஒருவர் பாடசாலைப் பருவத்திலேயே தலைமைத்துவம் வகிக்கும் திறனை விருத்திசெய்துகொள்ள வேண்டும்.




ஒருவர் தன்னிடம் பிரிதொருவரால் ஒப்படைக்கப்படும் பணியை சரியான முறையில் செய்து முடிப்பது என்பது, அவரிடம் காணப்படும் சிறந்த ஆற்றலாகும். அவ்வாறே, தன்னிடம் ஒப்படைக்கப்படும் பணிக்குத் தானே தலைமை தாங்கி அவற்றை தரமான முறையில் செய்து முடிப்பதும் சிறந்ததாகும். இதனை நடைமுறைப் பாங்கில் கொண்டுவர தலைமைத்துவத்தில் சில திறன்கள் உபயோகிக்கப்பட வேண்டும். அவற்றையே 'தலைமைத்துவப் பண்புகள்' என்கின்றோம். அவற்றை கீழே நோக்குவோம்.





## தலைமைத்துவப் பண்புகள்

- தான் விட்ட பிழைகளை ஏற்றுக்கொள்ளல்.
- மற்றவரின் கருத்தை ஊக்குவித்தல்.
- மற்றவரின் கருத்துக்கு இடமளித்தல்.
- அனைவருக்கும் சமமான அந்தஸ்து அளித்தல்.
- எந்த ஒரு விடயத்திற்கும் நன்றி தெரிவித்தல்.
- எதற்கும் 'நாம்' என்ற வார்த்தையைப் பிரயோகித்தல்.
- 'நான்' என்ற சொற் பிரயோகத்தை இயன்றவரை குறைத்தல்.



இதற்கமைய, ஒரு தலைவரின் செயற்பாடுகளும் அணுகுமுறைகளும் அவரைப் பின்பற்றுவோருக்கு மிகச் சிறந்த உதாரணங்களாக இருக்கின்றன.

எனவே, மாணவர்களே! நீங்கள் ஒரு விடயத்திற்கு தலைமைதாங்கும்போது, நீங்கள் விரும்பியவாறெல்லாம் நடந்துகொள்ளாது, இலட்சிய வழியில் உங்கள் நடத்தையை வழிநடத்த வேண்டும். மற்றவர்களால் நீங்கள் மதிக்கப்படக்கூடியவாறு நடந்துகொள்ள வேண்டும். ஏனையவர்களுக்கு நற்சிந்தனைகளையும் பெறுமதிமிக்க கருத்துக்களையும் பிரசாரங்களையும் சிறந்த வகையில் எடுத்துக்கூற வேண்டும். அதற்காக, தலைவருக்குரிய பண்புகளை மாணவர்கள் சிறுவயதிலிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு பாடசாலைப் பருவம் சிறந்த பயிற்சிக் களமாக அமையும். (தொடரும்)

**எம்.ஏ.எஃப். சப்ரானா**

---

# எறும்புலகின் ரகசியம்



**எறும்புகள் கூட்டாகவும் சமூக ரீதியாகவும் வாழ்கின்ற ஒரு பிராணி வகையாகும். எறும்புகளிடையே வேலைக்கார எறும்புகள் (சேவை செய்யும் எறும்புகள்), காவல்காக்கும் எறும்புகள், ராணி எறும்பு என மூவகை எறும்புகள் இருக்கின்றன. நாம் எறும்புகளின் வாழ்க்கையில் இருந்து கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள் மிக அதிகம்**



பாயும் எறும்பு

எறும்புகளின் சில இயல்புகள் மனிதர்களுடன் ஒத்துப் போவதாக அண்மைய ஆய்வொன்றினூடாக தெரியவந்துள்ளது. ஒன்றோடொன்று மாறுபட்ட இருவகையான எறும்புகளை ஆய்வுக்குட்படுத்திய அமெரிக்க விஞ்ஞானிகளே, ஆய்வு முடிவில் இத்தகைய புதிய தகவல்களை உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளனர்.

இதற்கமைய, சூழலுக்கு ஏற்ப தம்மை மாற்றி சுதாகரித்துக்கொண்டு வாழும் தன்மை எறும்புகளுக்கு நிறையவே உண்டு எனவும் மனிதனுக்கு சமமான நடத்தையைக்கொண்ட பிராணிதான் எறும்பு எனவும் நியூயோர்க்கில் உள்ள லென்கூன் பல்கலைக்கழக உயிரியல் ரசாயனத் துறை பேராசிரியர் டெனீ ரேய்ன்பர்க் தெரிவித்துள்ளார். சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப தேவையான நேரங்களில் இசைவாக்கம் அடையவும் நெருக்கடி ஏற்படும்போது, செயலிழந்து அமைதி காக்கவும் எறும்புகளால் முடியும் என இந்த ஆய்வுகளினூடாக மேலும் தெரியவந்துள்ளது.



நியூயோர்க் லென்கூன் பல்கலைக்கழக வைத்திய மையத்தின் விஞ்ஞானிகள் சிலர் சீன விஞ்ஞானிகளுடன் இணைந்து இந்த ஆய்வுகளை பென்சில்வேனியா மற்றும் அரிசோனா குடியேற்றப் பகுதிகளில் மேற்கொண்டனர். இப்பரிசோதனைகளுக்காக அவர்கள் இருவகையான எறும்புகளைப் பயன்படுத்தினர். அதில் ஒன்று 'ஜெர்டோன்' வகைக்குரிய பாயும் எறும்பு; மற்றையது ஃப்ளோரிடாவில் காணப்படும் 'மர எறும்பு'.

ஃப்ளோரிடாவின் மர எறும்பிடம் எறும்புக்கே உரித்தான மரபணு 20% காணப்படுகின்றதென்றும் மிகுதி 30% மனித மரபணுவுக்கு சமமானதென்றும் விஞ்ஞானிகள் விளக்கமளிக்கின்றனர். மர எறும்பில் ராணிக்கு மாத்திரமே குஞ்சுகள் பொரிக்கக்கூடிய முட்டைகளை இடும் இயல்புடையதாகக் காணப்படுகின்றது. இந்த எறும்புகளின் வாழ்வு முறைகளும் சமூக அமைப்பும் மிகவும் திட்டமிடப்பட்டதோடு, கூட்டு முறையிலானதாகவும் இருக்கும். இதில், வம்சத்தை உருவாக்க முடியாத எறும்புகள் இருபெரும் பிரிவுகளுக்குள் உள்வாங்கப்படும். ஒன்று பிரதான வகுப்பு; மற்றையது சிறிய வகுப்பு. பிரதான வகுப்புக்கு உரித்தான எறும்புகளே தமது கூட்டத்தைப் பாதுகாக்கும் கடமைகளில் ஈடுபடும்.

பாயும் எறும்பு வகையின் ராணி இறந்த பின்னர், அச்சிறிய எறும்புக் கூட்டத்தில் இருக்கும் சேவை செய்யும் எறும்புகள் ஒன்றோடொன்று கடுமையாக மோதிக்கொள்ளும். இம்மோதலின் பின்னர், அடுத்த ராணியாகத் தெரிவாகக்கூடிய சில எறும்புகளே எஞ்சியிருக்கும். ராணி எறும்புகளில் அவற்றுக்கு நீண்ட ஆயுளைப் பெற்றுக்கொடுக்கும் வகையிலான புரதம் அதிகமாக இருப்பதாக ஆய்வின்போது விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இந்த ஆய்வுகளின்படி; எறும்புகளின் கூட்டத்தில் வசிக்கின்ற சேவை செய்யும் எறும்புகளின் ஆயுட்காலத்தைவிட, பத்து மடங்கு ஆயுட்காலத்தை ராணி எறும்பு கொண்டிருப்பதும் தெரியவந்துள்ளது. அத்துடன், பொதுவாக எல்லா எறும்புகளும் தமது கடமைகளை இனங்கண்டு, அதற்கேற்ப இயல்பாகவே செயற்படும் விதம் குறித்தும் இந்த ஆய்வின்போது விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

(அ)



மர எறும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றப்பர் இவ்வாறுதான்

ஏறத்தாழ 150 வருடங்களுக்கு முன் 'டியுக் ஒப்டெவொன்ஷயர்' எனும் கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு வந்தது. அதிலிருந்து 'வோடிய்ன் பொக்ஸ்' எனும் பெயரில் சில மரப் பெட்டிகள் தரை இறக்கப்பட்டன. அதிலிருந்த மரச்செடிகளை முன் ஒருபோதும் இந்நாட்டில் எவரும் கண்டிருக்கவில்லை. தென்னாபிரிக்க 'எமர்சன்' ஆற்றோரத்திலிருந்து கொண்டு வரப்பட்ட அச்செடி அப்போது 'பாராறப்பர்' என்றே அழைக்கப் பட்டது. எனினும், அதன் தாவரவியல் பெயர் ஹிவியா பிரைலியென் சிஸ் என்பதாகும். அதை அறிமுகப்படுத்தியவர் ஹென்ரி விக்ஹம் என்பவராவார். அதனால்தான் 'இலங்கையின் றப்பர் மரப் பிதா' என அவர் நினைவுகூரப்படுகிறார்.



மரப்பட்டையில் கீறல்



வடியும் பாலை சேகரித்தல்



மொத்தப் பாலையும் சேகரித்தல்




பாலைப் பாத்திரத்தில் பரப்புதல்

றப்பர் விதை முதலில் கம்பஹா ஹெனரத் கொடை நிலப்பரப்பிலும், பேராதெனிய நிலப்பரப்பிலும் நடப்பட்டது. அப்போது, கோப்பி விளைச்சல் அழிவுக்குள்ளாகியிருந்தமையால் றப்பர் நடப்பட்டது. அத்தோடு, 1842 ஆம் ஆண்டு சார்ள்ஸ் குட் இயரும், தோமஸ் ஹெனொக்கும் றப்பரோடு கந்தகத்தையும் கலந்து றப்பரின் இயற்கைத் தன்மையை மாற்றி றப்பர் வல்கனைசை உருவாக்கியிருந்தனர். இதனால், உலகில் ஐரோப்பியரின் செல்வாக்கு அதிகரித்தது. அத்துடன், 1900 ஆம் ஆண்டு வாகன உற்பத்தி உலகில் ஆரம்பமாகியமையால் றப்பருக்கு உலக அளவில் அதிகமான கேள்வி எழுந்தது.

## பயன் பெறுவது எப்படி?

றப்பர் மரத்தின் பட்டையிலேயே பால் உள்ளது. பட்டையை உரியவாறு கீறி, பாலை எடுக்கலாம். காலை வேளையே இதற்குப் பொருத்தமாகும். இவ்வாறு வெட்டப்பட்ட பகுதியிலிருந்து 3 அல்லது 4 மணித்தியாலங்கள் வரை பால் வடியும். ஒரு நாள் விட்டு ஒருநாள் அல்லது இரு நாள் விட்டு மறுநாள் என பால் எடுப்பதற்கு இரு வகைகள் உள்ளன. இவற்றில் முதல் வகையே உகந்ததாகும். மரத்தின் அளவுக்கேற்பவே வெட்ட வேண்டிய ஆழமும் அமைதல் வேண்டும். வெட்டும்போது, அகற்றப்பட வேண்டிய மரப்பட்டையின் அளவு 0.125 சென்ரிமீற்றராக இருக்க வேண்டும். றப்பர் மரம் வெட்டுவதற்கென்றே தயாரிக்கப்பட்ட விசேடமான கூர்மையான உருக்குக் கத்தியே இதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

## றப்பர் விளைச்சலுக்கு அவசியமானவை

27c° வெப்பநிலையும் 20,000 மில்லிமீற்றருக்கும் அதிகமான வருடாந்த மழை வீழ்ச்சியும், 0.300 மீற்றருக்கு இடைப்பட்ட மேட்டு நிலமும் 'கபூக்' மண்ணும் றப்பர் விளைச்சலுக்கு அவசியமானவையாகும்.

## றப்பர் பாலில் அடங்கியிருப்பவை

30 வீதம் உலர்ந்த றப்பரும், 65 வீதத்திலிருந்து 70 வீதம் வரையிலான நீரும், 4.5வீதம் புரோட்டினோடு லிபிட்டும், 1வீதம் காபோஹைதரேட்டும் சிறிதளவு கெரடின் எனும் வர்ணமும் றப்பர் பாலில் அடங்கியுள்ளன.

## பாதிப்பு நேராமல் பாதுகாக்க

றப்பர் பாலில் புரோட்டினும் காபோஹைதரேட்டும் இருப்பதால் அதில் இலகுவாக பக்றீரியா பெருகுகின்றது. இதனால், ph வீதம் குறைந்து றப்பர் பால் கெட்டியாகிவிடுகின்றது. அவ்வாறு கெட்டியாகும் றப்பரினால் உயர்ரக கிரேப் றப்பரையும், ஷீட் றப்பரையும் உற்பத்தியாக்க முடியாது. எனவே, றப்பர் பாலை கெட்டியாகாமல் தடுக்க பக்றீரியா பெருகுவதைக் குறைத்தல் வேண்டும். அந்தவகையில் பால் எடுக்கப்படும் மரத்தின் வெட்டப்பட்ட பகுதியை அசுத்தம் செய்யாதிருத்தல் வேண்டும், அவ்வாறே, பாலை சேகரிக்கப் பயன்படுத்தும் பாத்திரத்தை அசுத்தமாக வைப்பதுமே பக்றீரியா பெருகுவதற்கான காரணங்களாகும். எனவே, மரப்பட்டையை வெட்டிப் பாலை எடுத்த பின்னர் அந்த இடத்தை மூடிக் கட்டிவைக்க



றப்பர் பாலை சேகரித்தல

பாலைச் சேகரிக்கும் தேங்காய் சிரட்டையில் மழை நீரோ, குப்பைகளோ தேங்காமல் தடுப்பதற்காக, அப்பகுதி இவ்வாறுதான் மறைத்துக் கட்டப்பட்டிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உருவாகின்றது



பதப்படுத்தப்பட்ட றப்பர் துண்டுகளில் உள்ள நீரை அகற்றி மிருதுவாக்கும் சுமல் கருவி



ஈரம் அகற்றப்பட்டு, மிருதுவாக்கப்பட்டு சுழல் கருவியில் இட்டு அழுத்தப்படுகின்றது



அழுத்தியெடுக்கப்பட்ட றப்பர் துண்டுகளில் மேலதிகமாக உள்ள ஈரலிப்பை நீக்க உலரவிடல்



தீயின் வெப்பத்தில் மேலும் உலரவிடல்



உலர்த்தப்பட்ட றப்பர் துண்டுகளை களஞ்சியப்படுத்தல்

...டும். அவ்வாறே பாத்திரங்களையும் சுத்தமாக கழுவிப் பேணல் வேண்டும்.

## ரசாயனக் கலப்பு

குறுகிய காலத்துக்கும் நீண்ட காலத்துக்கும் என இரு வகைகளில் றப்பர் பாலை சேமித்து வைக்கலாம். குட்டி றப்பர் மற்றும் கிரேப்றப்பர் ஆகியவற்றின் உற்பத்திக்காகவே, குறுகிய காலத்துக்கென அது சேமித்து வைக்கப்படுகிறது. அவ்வாறு சேமித்து வைக்கப்படும் றப்பர் பாலை தொழிற்சாலைக்குக் கொண்டு செல்லும்வரை பால் பழுதடையாமல் தடுப்பதற்காக, அமோனியா, சோடியம், சல்பைட் சோடியம் காபனேட், போமெல்ட்ஹைட் ஆகிய ரசாயனப் பொருட்கள் இதில் கலக்கப்படுவதுண்டு. இவற்றில் அமோனியாவே றப்பர் பால் நீண்டகாலம் கெடாது சேமிப்பில் வைத்திருக்கச் செய்கிறது.

## றப்பர் பால் நிர்ணயித்தல்

கிரேப் றப்பரையும், ஷீட்றப்பரையும் தயாரிக்கையில் றப்பர் பால் பாரிய பாத்திரத்தில் ஊற்றிச் சூடாக்கப்படுகின்றது. பின்னர் போதிய அளவுக்கு சூடு தணியும்வரை நீர் கலக்கப்படுகிறது. இதை 'றப்பர் பால் நிர்ணயித்தல்' எனலாம். இதன்மூலம் இறுக்கம் குறைவடைந்து இலகுவாக ரசாயனப் பொருட்களைக் கலந்து பயன்படுத்த முடிகின்றது.

## பலன் தாமதமாவதைத் தடுக்க

றப்பர் மரத்திலிருந்து பால் எடுக்கப்பட்ட பின் அது 'கிரேப் றப்பர்' 'ஷீட் றப்பர்' என இருவகையாகப் பிரிக்கப்படுகின்றது. றப்பர் மரத்தின் ஆயுட்காலம் 25 அல்லது 30 ஆண்டுகளாகும். எனினும், ஆறு வருடங்கள் கழிந்த பின்னரே அதிலிருந்து பால் எடுக்க முடியும். இதன் காரணமாகவே, சில தோட்ட முதலாளிகள் றப்பரை உற்பத்தி செய்யத் தயங்கினர். அதை ஈடுகட்டவே தற்போது கறுவா, வாழை, அன்னாசி, ஆகியவையும் பயிரிடப்படுகின்றன. இவ்வாறு வேறு பயிர்களையும் விளைவித்துத்தான் றப்பரை நாடு முழுக்கப் பரவலாக உற்பத்திசெய்ய முடிகின்றது.



இலைகள் உதிர்ந்து கொழுந்துவிட்டிருக்கும் றப்பர் தோட்டம்

## றப்பர் பாலில் தயாரிக்கப்படும் பொருட்கள்

அச்சு வார்க்கப்பட்ட றப்பர் பாலால் பலூன், கையுறை பட்டி, மெத்தை ஆகியனவும் ஷீட் றப்பர் கிரேப்றப்பர் ஆகியவற்றால் டயர், விளையாட்டுப் பொருட்கள், செருப்பின் அடிப்பாகம், சப்பாத்து, றப்பர் குழாய், டியூப், பந்து, கைப்பை ஆகியனவும், றப்பர் காயினால் எண்ணெய், மிருக உணவு ஆகியவையும், றப்பர் பலகையால் விளையாட்டுப்பொருட்கள் வீட்டுத் தளபாடங்கள் தேயிலைப் பெட்டிகள் இருக்கைகள் ஆகியனவும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

## றப்பரை இறக்குமதி செய்யும் நாடுகள்




## வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி

எமது நாட்டு றப்பர் உற்பத்தியில் 100 வீதத்துக்கு 65 வீதம் றப்பர் மூலப்பொருளையும், றப்பர் பால் கலந்து செய்யப்பட்ட பொருட்களாகவும் பிறநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. எனினும், இது உலக றப்பர் உற்பத்தியில் 4% மாகும்.

இலங்கையில் உள்ளூர் தேசிய உற்பத்திக்காக 35 வீத றப்பர் பயன்படுத்தப்படுகின்றது. இலங்கையின் றப்பரை இறக்குமதி செய்யும் பிரதான நாடு சீனாவேயாகும். அத்தோடு, ஈராக், ஜப்பான், பங்களாதேஷ், இங்கிலாந்து, கொரியா, பாகிஸ்தான், சிங்கப்பூர், மெக்சிகோ, ஜேர்மனி ஆகிய நாடுகளும் இலங்கையிடமிருந்து றப்பரை இறக்குமதி செய்கின்றன.



றப்பர் காய்



றப்பர் செடி

## ஆரம்ப ஏற்றுமதி

இலங்கையிலிருந்து முதன்முதலாக 1883 ஆம் ஆண்டில்தான் றப்பர் ஏற்றுமதியாகியுள்ளது.1909 ஆம் ஆண்டு இங்கிலாந்தைச் சேர்ந்த இலங்கையின் மலையக தோட்ட உரிமையாளர் சிலர் அகலவத்தையில் றப்பர் ஆராய்ச்சி நிலையமொன்றை ஸ்தாபித்தனர். அதுவே, உலகின் பழைய றப்பர் ஆராய்ச்சி நிலையமாகும். றப்பர் பாலை உற்பத்திப் பொருட்களுக்கு அமைவாகப் பதப்படுத்த, ரசாயனக் கலவைகளைக் கலப்பது எப்படி? என ஆராய்வதே இதன் முக்கிய நோக்கமாகும். அத்துடன், பாரிய அளவிலும் சிறு அளவிலும் தோட்டப் பயிர்ச்செய்கை மூலம் வளர்க்கப்படும் றப்பர் இலங்கைக்கு அந்நிய செலாவணியையும் பெற்றுத் தருவதுடன், பலருக்கு தொழில் வாய்ப்புக்களையும் வழங்கிவருகின்றது. எனவே, பொருளாதாரத்தோடு சமூகநீதியிலும் கூட எமது நாட்டுக்குப் பயன் தரும் உற்பத்தியாக றப்பர் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**ஏ.ஜே.எம்.நிழாம்**

## இலங்கையில் முக்கியமாக றப்பர் பயிரிடும் பிரதேசங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹேன்ஸ் எஜ் சிலை
தலைநகரின் ஒரு பகுதி
நியூக் சர்வதேச விமான நிலையம்

# கிறீன்லாந்து

**அரசு:** நாடாளுமன்ற ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்பிலான முடியாட்சி. டென்மார்க் பேரரசின் மேலாதிக்கத்தின்கீழ் ஆட்சி நடைபெறுகிறது.

நோர்வேயின் அதிகாரத்தின்கீழ் வந்தது-1261 ஆம் ஆண்டு. மீள் ஆட்சி நிலைநிறுத்தம் - 1721 ஆம் ஆண்டு. டென்மார்க்கின் அதிகாரத்தின்கீழ் வந்தது-1814 ஜனவரி 14. சுயாட்சி- 21 ஜூன் 2009.

**தேசிய தினம்:** ஜூன் 21.

**தலைமை ஆட்சி அதிகாரி** (2009):இரண்டாம் மார்க்ரட் ராணி (டென்மார்க் பேரரசு).

**உயர் ஸ்தானிகர்** (2005): சோரன் மொலர்.

**பிரதமர்** (2009): கூபிக் க்ளெஸ்ட்.

## புவியியல்

கிறீன்லாந்து, உலகிலேயே மிகப்பெரியதொரு தீவாகும். அது ஆர்க்டிக் சமுத்திரத்திற்கும் வட அட்லாண்டிக் சமுத்திரத்திற்கும் இடையே கெனடாவிற்கு வடக்கிலும் ஐஸ்லாந்திற்கு வடமேற்கேயும் அமைந்துள்ளது. கிறீன்லாந்தின் கரையோரப் பகுதி கரடு முரடானதும் மலைகள் நிறைந்ததும் எவ்வித பயனுமற்ற நில அமைப்பையும் கொண்டுள்ளது. நாட்டின் 81%மான நிலப்பகுதி பனிப்பாறைகளைக் கொண்டது. இங்கு வெந்நீரூற்றுக்கள் பல அமைந்துள்ளன. கிறீன்லாந்தில் இருபதுக்கும் மேற்பட்ட நதிகள் பாய்கின்றன. அனைத்து நதிகளும் கரையோரப்பகுதிகளிலேயே காணப்படுகின்றன. இந்த நதிகள் இங்குள்ள பாரிய பனிப்பாறைகள் உருகுவதனூடாகவே உருவாகின்றன. இங்கு பல சிறிய கோடை ஏரிகள் காணப்படுகின்றன. பாரிய பனிப்பாறைகள் உருகும் காலத்தில் - இந்த ஏரிகள் உருவாகி, மாரிகாலத்தில் விரைவாக உறைந்து இல்லாமல் போய்விடும்.

**மொத்தப்பரப்பு:** 2,166,086 ச.கி.மீ.

**பனிப்பாறைகளால் மூடப்பட்ட பகுதி:** 1,755,637 ச.கி.மீ.

**தலைநகரமும் பெரிய நகரமும்:** நியூக் (கோப்தப்)

**உயர் மலைச்சிகரம்:** குன்ஜோன் மலை - 3,700 மீற்றர்.


தலைமை ஆட்சியாளர்


உயர் ஸ்தானிகர்


பிரதமர்

**தாழ்மையம்:** அட்லாண்டிக் சமுத்திரம்.

**சனத்தொகை** (2010): 57,637.

**நாணயம்:** க்ரோன்.

**மொழிகள்:** கிறீன்லேண்டிக், டேனிஷ்,ஆங்கிலம்.

**இனக்குழுக்கள்** (2000): கிறீன்லேண்டர் 88%, டெனிஷிஷ் மற்றும் ஏனையோர் 12%.

**சமயம்:** கிறிஸ்தவம் 96.6%, மதமற்றோர் 2.2%.

**எழுத்தறிவு:** 100%.

**இணையத்தளக் குறியீடு:** gl

**தொலைபேசி இலக்கம்:** +299.

**தேசிய கீதம்**

Nunarput, utoqqarsuanngoravit niaqqut ulissimavoq qiinik.
Qitornatit kissumiaannarpatit tunillugit sineriavit piinik.
Akullequtaasut merlertutut ilinni perortugut tamaani….என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

'இன்யுட்' என அழைக்கப்படும் பூர்வீக ஆர்க்டிக் மக்கள், வட அமெரிக்காவிலிருந்து கி.மு.4000 ஆண்டிற்கும் கி.பி. 1000 க்கும் இடைப்பட்ட காலத்தில் கிறீன்லாந்திற்கு இடம் பெயர்ந்து வந்து குடியேறியதாக நம்பப்படுகின்றது. ஸ்கெண்டிநேவியரான எரிக் த ரெட் தலைமையில் கி.பி.985-986 களில் கிறீன்லாந்தில் குடியேற்றமொன்று நிறுவப்பட்டது.நோர்வே, சுவீடன், டென்மார்க்,பின்லாந்து ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ஸ்கெண்டிநேவிய குடியேற்றம், 14 ஆம் நூற்றாண்டில் வீழ்ச்சியடைந்தது. 15 ஆம் நூற்றாண்டில் கிறீன்லாந்தில் முன்னொரு'போதும் இல்லாத கடுங்குளிரின் விளைவாக, 15 ஆம் நூற்றாண்டில் மக்கள் வாழ்க்கை முற்றாக அழிந்தது. 1721 இல் கிறீன்லாந்தில் மீள் குடியேற்றம் தாபிக்கப்பட்டது. இதனை டென்மார்க்கின் ரோயல் கிறீன்லேண்ட் வர்த்தக கம்பனியே மேற்கொண்டது.


நியூக் ஓவிய அருங்காட்சியகம்

இரண்டாம் உலக யுத்தத்தின் போது, ஐக்கிய அமெரிக்காவின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டு, டென்மார்க்கின் கண்காணிப்பில் இருந்தது. 1953 இல் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தத்தின்படி, டெனிஷ் யாப்பில் கிறீன்லாந்து டென்மார்க்கின் ஒரு பகுதியாக கொண்டுவரப்பட்டது.1979 மே முதலாம் திகதி முதல் கிறீன்லாந்து தனது சொந்த உள்ளூர் நாடாளுமன்றத்தை அமைத்து, சுயாட்சி மூலம் தன்னைத் தானே ஆளும் உரிமையைப் பெற்றது. 2008 நொவெம்பரில் கிறீன்லாந்து வாக்காளர்கள் தமது முழுமையான சுதந்திரத்தை உறுதிப்படுத்தினர்.




தேசிய இலச்சினை

## காலநிலை

கிறீன்லாந்தின் காலநிலை உப ஆர்க்டிக் வலய காலநிலையாகக் காணப்படுகின்றது. குளிர்ச்சியான கோடையும் கடுங்குளிரான காலநிலையும் மாரிகாலத்தில் நிலவுகிறது. இத்தகைய காலநிலை கிறீன்லாந்தின் தென் பகுதியிலேயே காணப்படுகின்றது. பொதுவாக, நாட்டின் முழுப்பிரதேசத்திலும் கடுமையான பனிப்படிவு வீழ்ச்சி காணப்படுகின்றது. தென் கிறீன்லாந்தில் கோடைகாலத்தில் மாத்திரம் உறைபனி உருகும். கோடை காலங்களில் மிக நீண்ட பகலின் காரணமாக, இரவும் பகல் போன்று இருக்கும். இதனால், இங்கு நடு இரவு சூரியனைக் காணலாம்.









## கலாசாரம்

கிறீன்லாந்தின் கலாசாரமானது இன்யுட் எனும் ஆர்க்டிக் ஆதிகால மக்களின் பாரம்பரிய கலாசாரத்தையே பிரதிபலிக்கின்றது.

## தொடர்பாடல்

**பிரதான தொலைபேசிகள்** (2008): 23,500; செல்லிடத் தொலைபேசிகள் (2001)-16,747. **வானொலி நிலையங்கள்** (1998): AM 5, FM 12. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2002):1. **இணையத்தள வழங்குனர்:** 1; இணையத்தள பாவனையாளர்கள்: 92%.

## போக்குவரத்து

**பெருந்தெருக்கள்:** மொத்தம் 150 கி.மீ. **துறைமுகங்கள்:** நியூக், நர்சாக், கார்கோர்டொக், ஆசியாட். **விமான நிலையங்கள்:** 14.

## பொருளாதாரம்

**விவசாயம்:** பச்சைவீட்டு மரக்கறிகள், செம்மறியாடு, துருவக் கலைமான், மீன்கள். **பிரதான கைத்தொழில்கள்:** மீன் உற்பத்திப் பொருட்கள், கைவேலைப்பொருட்கள், தோல் மற்றும் பதனிடப்பட்ட தோல் பொருட்கள், சிறிய துறைமுக கைத்தொழில். **இயற்கை வளங்கள்:** செம்பு, வெள்ளி, இரும்புருக்கு, யுரேனியம், மீன், நீர்நாய், திமிங்கிலம், நீர்மின் வலு. **ஏற்றுமதிகள்** (2008): மீனும் மீன் உற்பத்திப்பொருட்களும் 94%.

**இறக்குமதிகள்** (2008): இயந்திரங்களும் போக்குவரத்து உபகரணங்களும்,உணவு, பெற்றோலிய உற்பத்திகள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): டென்மார்க், ஜப்பான், சீனா, சுவீடன், நோர்வே.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

✱ காடுவெக் கலாசார நிலையம் ✱ ஹேன்ஸ் எஜ் தேவாலயம் மற்றும் ஹேன்ஸ் எஜ் சிலை ✱ நியூக் ஓவிய அருங்காட்சியகம் ✱ கிறீன்லாந்து தேசிய நூதனசாலை ✱ டிஸ்கோ தீவு ✱ கிறீன்லாந்து தேசிய பூங்கா.


கிறீன்லாந்தின் உருகும் பனிப்பாறைகள்


உயர் மலைச்சிகரம்


கிறீன்லாந்து பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எல்நினோ-லாநினா காலநிலை மாற்றங்கள்

பசுபிக் கடற் பிரதேசத்தில் ஏற்படும் பலமான காற்றின் காரணமாக, வெப்பமான கடல் நீர், குளிர் பிரதேசத்திற்கும், குளிர் பிரதேசத்திலுள்ள கடல் நீர் வெப்பப் பிரதேசத்திற்கும் அடித்துச் செல்லும்போது, கடலின் இரு பகுதிகளிலும் காலநிலை மாற்றங்கள் நிகழ்வதுண்டு. இவ்வாறு கடல் நீர் வெப்பநிலையை அதிகரிக்கச்செய்வதை 'எல்நினோ' என்றும், அதேவேளை, குளிர்வடைவதை 'லாநினா' என்றும் அழைக்கின்றனர்.

> அமெரிக்காவின் ஆன்கோவி தீவில் வசித்துவந்த இம்மீனவச் சிறுவன், முதன்முதலாக கடலில் அழுத்தத்தை ஏற்படுத்தும் நீரோட்டத்தைக் கண்டான். அதன் பின்னர் இது பற்றிய ஆராய்ச்சிகள் தொடர்ந்ததோடு, 1923 இல் சேர் கில்பட் தோமஸ் வோக்கர் என்பவரே இதுபற்றி முதன் முதலில் உலகிற்கு விளக்கமளித்தவராவார்

பொதுவாக இரண்டுமே வானிலையில் தாக்கத்தை ஏற்படுத்தி உயிர்ச்சேதம், பொருட்சேதங்களை ஏற்படுத்தவல்லன.

எல்நினோ அல்லது லாநினா காலநிலை மாற்றங்கள் மூன்று வருடங்கள் அல்லது ஏழு வருடங்களுக்கு ஒருமுறை நிகழலாம். இந்நிகழ்வின் போது, வழமையாக கடற்பகுதியில் கிழக்கு மேற்காக வீசுகின்ற காற்று திசைமாறி, மேற்கு-கிழக்காக வீசுவதால், உலகின் பல பகுதிகளில் காலநிலை மாற்றங்கள் ஏற்படுகின்றன. பசுபிக் சமுத்திரத்தில் நிகழ்கின்ற முக்கியமான வெப்பநிலை ஏற்றத்தாழ்வாக இது கருதப்பட்டபோதிலும், இதன் விளைவுகள் உலக வானிலையில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்துவதோடு, உலகின் பல பகுதிகளில் வறட்சியையும், வெள்ளத்தையும் உண்டுபண்ணும் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக, டிசம்பர் மாதம் பேரு, எக்விடர், சிலி, தென் அமெரிக்கப்பகுதிகளில் வழமைக்கு மாறாக வெப்பம் அதிகரிப்பதால், வறட்சித் தன்மை தோன்றி, பொருளாதார வீழ்ச்சியையும், உயிர்ப் பலிகளையும் ஏற்படுத்துகின்றது. இந்நிகழ்வின் காரணமாகவே, பசுபிக் பெருங்கடலின், கிழக்கத்தியப் பகுதிகளில் அதிகமான மழை வீழ்ச்சி, வெள்ளப்பெருக்கு என்பன ஏற்படுகின்றன.







எல்நினோ தாக்கம் காரணமாக, பசுபிக் பெருங்கடலின் மேற்குப் பகுதியில் அதிகமான வறட்சி நிலவுவதால், இப்பிரதேசங்களில் காடுகள் எரிதல், கடல் மீன்களுக்கு இடர், விவசாயப் பொருளாதாரப் பாதிப்பு என்பன ஏற்படுகின்றன. வழமையாக கடல் நீர் குளிர்ச்சியாகக் காணப்படுவது, கடல்வாழ் உயிரினங்களின் இலகுவான வாழ்வுக்கு வழிவகுப்பதால், அவற்றின் அதிகரிப்புக்கு இச்சூழல் காரணமாக அமைகின்றது. இதற்கு மாறாக, கடல் நீர் வெப்பமடைவதனது கடல்வாழ் உயிரினங்களுக்கு உணவுப் பற்றாக்குறையை ஏற்படுத்துவதுடன், அவற்றின் பெருக்கத்தில் குறைநிலையை ஏற்படுத்துகின்றது.

எல்நினோ அதிகமான வெப்பம், வறட்சியை ஏற்படுத்துவதனால் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் கோதுமை உற்பத்தி, இந்தோனேஷியா, மலேசியா போன்ற நாடுகளில் பாம் எண்ணெய் (Palm oil) உற்பத்தி, இந்தியாவில் சீனி உற்பத்தி போன்றவற்றிற்கு பாரிய தாக்கம் ஏற்படுகின்றது. 1978-79, 1982-83 களில் இந்தியாவில் ஏற்பட்ட கடும் வறட்சி காரணமாக, உணவு உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டமையும், இந்தியாவின் பல மாநிலங்களில் நீர் பற்றாக்குறை ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. பொதுவாக, பசுபிக் பெருங்கடலில் ஏற்படுகின்ற எல்நினோ வானிலை மாற்றம் ஆசியாவின் பெரும் பகுதிகளுக்குப் பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்தவல்லது. தவிர, வெப்பம் அதிகரிப்பதனால், இப்பிரதேசங்களில் வாழும் மனித இனத்தின் இருப்பிற்குப் பாரிய அச்சுறுத்தலும் தாக்கங்களும் ஏற்படுகின்றன.

ஸ்பானிய மொழியிலிருந்து பிறந்த எல்நினோ - லாநினா என்ற - சொற்கள் முறையே சிறு பையன், பெண் சிறுமி போன்ற பொருள் தரக்கூடியதாகும். இந்நிகழ்வுகள் நத்தார் காலங்களில் நிகழ்வதால், பாலகன் யேசுவை நினைவுபடுத்துவதற்காக இச்சொற்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

19 ஆம் நூற்றாண்டில் எல்நினோ தாக்கம் பற்றி ஒரு சாதாரண மீனவச் சிறுவனே கண்டறிந்தான். தென் அமெரிக்காவின் ஆன்கோவி தீவில் வசித்துவந்த இம்மீனவச் சிறுவன், முதன்முதலாக கடலில் அழுத்தத்தை ஏற்படுத்தும் நீரோட்டத்தைக் கண்டான். அதன் பின்னர் இது பற்றிய ஆராய்ச்சிகள் தொடர்ந்ததோடு, 1923 இல் சேர் கில்பட் தோமஸ் வோக்கர் என்பவரே இதுபற்றி முதன் முதலில் உலகிற்கு விளக்கமளித்தவராவார்.

1980 ஆம் ஆண்டில் ஸ்கெண்டினேவிய விஞ்ஞானியான ஜோக்கஸ் என்பவர், பசுபிக் பெருங்கடலில் ஏற்படுகின்ற எல்நினோ அழுத்தமானது உலகின் பல பகுதிகளிலும் வானிலைத் தாக்கத்தை ஏற்படுத்தவல்லது என்பதை விஞ்ஞான ரீதியாக நிருபித்து வெளியிட்டார். (Sothern Oscillation Index) மூலம் எல்நினோவால் கடற்பகுதியில் ஏற்படும் மாற்றம் அளவிடப்படுகின்றது. இதன் மூலம் கிழக்கு பசுபிக் கடலில் தகிதி என்ற இடத்திலிருந்து அவுஸ்திரேலியாவிலுள்ள டார்வின் வரையிலான கடற்பகுதி வரை கடல் அமுக்கம் அளவிடப்பட்டு வானிலை மாற்றம் கணிப்பிடப்படுகின்றது.

**December - February Normal Conditions**










**செம்மைத்துளியான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - II

பெயர்: ................................... நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

01) பின்வரும் அழைப்பிதழை வாசித்து, அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

> **அழைப்பிதழ்**
>
> **சம்பூர் மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கல்விக் கண்காட்சி-2010**
>
> இடம்: வித்தியாலய மண்டபம்
>
> காலம்: ஏப்ரல் 18,19 மற்றும் 20-ஆம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை
>
> பிரதம அதிதி: பேராசிரியர் ச.எழிலரசன்
>
> இக்கண்காட்சியைப் பார்வையிட வருமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.
>
> சம்பூர் - 5
> திருகோணமலை
>
> அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

(i) கண்காட்சியை நடாத்தும் பாடசாலையின் பெயர் என்ன?..............................
(ii) எந்தப் பிரிவு மாணவர்களின் கண்காட்சி நடைபெறுகிறது?..............................
(iii) பிரதம அதிதியின் பெயர் என்ன?..............................
(iv) கண்காட்சி எத்தனை நாட்கள் நடைபெறும்?..............................
(v) கண்காட்சி எத்தனை மணிக்கு ஆரம்பமாகிறது?..............................
(vi) கண்காட்சி எத்தனை மணிக்கு நிறைவடைகிறது?..............................
(vii) இப்பாடசாலை எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது? ..............................

02) அடைப்புக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து, வெற்றிடத்தை நிரப்புக.

(i) காடுகளை.................. ப்பதனால் சுற்றுப்புறச் சூழல் பாதிப்படைகிறது.
(அலி, அளி, அழி)

(ii) அவர்கள் ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு மாடியிலிருந்து ..................
(இரங்கினார், இறங்கினர், இ்ரங்கினர்)

03) (i) பின்வரும் வாக்கியத்தை ஒருமையாக மாற்றி எழுதுக.

✱ குழந்தைகள் நிலாக்காட்சியைக் கண்டு களித்தன.

..............................

(ii) பின்வரும் வாக்கியத்தைப் பன்மையாக மாற்றி எழுதுக.

✱ சூரியனைக் கண்டு தாமரை மலர் மலர்ந்தது.

..............................

04) பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.

(i) முகம் மலர்தல் - ..............................
(ii) கண் வளர்தல் - ..............................

05) பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

(i) விசாரணை முடிவில் நீதிப்தியால் வழங்கப்படுவது:..............................
(ii) தாய், தந்தையரை இழந்தவன்: ..............................

06) பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.

(i) தம்பி பிரதேச செயலகத்திற்கு எப்படிச் செல்ல வேண்டும்
(ii) தாயே சுக்கிரீவன் எங்கே இருக்கிறான் என்று இராமன் கேட்டான்

07) சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக.

(i) ஊக்கத்தைக் / மகிழ்ச்சி / உங்கள் / கண்டு / நானும் / அடைகிறேன்.

..............................

(ii) தொழிற்சாலை / கடதாசித் / இருக்கிறது / வாழைச்சேனையில்

..............................

08) பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

(i) அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி -..............................
(ii) எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லாக்கு - ..............................

09) ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

(i) கதிரை..............................
(ii) வகுப்புத் தலைவர்..............................
(iii) நூலகம்..............................

10) பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

(i) Thank you -..............................
(ii) What is it?-..............................
(iii) may I come in?-..............................




11) பின்வரும் ஒவ்வொரு சிங்கள வாக்கியத்தினதும் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) ஒ(B)பே கம கொஹே(Dh)த?..............................
(ii) மட தோசே தென்ன..............................

★ *12 தொடக்கம் 36 வரையுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.*

12) பங்குனி மாதத்தில் பூக்கும் தாவரம் எது?

(1) ரம்புட்டான் (2) நப்பர் (3) முள்முருக்கு (4) இலுப்பை

13)  இவ்வுருவில் உள்ள பூ எது?

(1) அகத்திப் பூ (2) நீல அல்லி
(3) கடதாசிப் பூ (4) கார்த்திகைப் பூ

14) ஔடத பானங்கள் தயாரிக்கப் பயன்படும் பூ எது?

(1) கடதாசிப் பூ (2) எக்சோரா
(3) பொன்னாவரைப் பூ (4) தாமரைப் பூ

15) வருடத்தின் அனைத்துக் காலப்பகுதியிலும் பூக்கும் பூ எது?

(1) இலுப்பைப் பூ (2) கார்த்திகைப் பூ
(3) தாழம் பூ (4) லில்லிப் பூ

16) கூர்மையான கேட்டல் திறன் கொண்ட பிராணி எது?

(1) கழுகு (2) புலி (3) நாய் (4) பருந்து

17) மலேரியாக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்பு வகை எது?

(1) கியூலெக்ஸ் (2) ஈடிஸ் இன பெண் நுளம்பு
(3) அனோபிலஸ் பெண் நுளம்பு (4) அனோபிலஸ் ஆண் நுளம்பு

18) மழை நேரங்களில் நனைய விரும்பும் பிராணி எது?

(1) எருமை (2) சிங்கம் (3) ஆடு (4) முயல்

19) மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளில் முதலில் செய்ய வேண்டிய செயற்பாடு எது?

(1) மனதைத் தளர்த்தல் (2) உடலைத் தளர்த்தல்
(3) மனவுறுதி (4) பிரார்த்தனை

20) பின்வரும் முகங்களில் சோகமான முகபாவனையைக் காட்டும் முகம் எது?




21) சிறுவர்களுக்கு உடல் ரீதியாகவோ, உள ரீதியாகவோ துன்பம் விளைவிப்போர் பற்றி அறிவிக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்;

(1) 1231 (2) 118 (3) 1919 (4) 119

22) மயக்கமுற்ற நோயாளிக்கு மிகப்பொருத்தமான முதலுதவியாக அமைவது;

(1) ஆடைகளைத் தளர்த்தி காற்றுப்பட விசிறுதல்
(2) தலையை நன்கு கீழ்நோக்கித் திருப்பிக் காற்றுப்படச் செய்தல்
(3) சிறிதளவு நீரைத் தெளித்தலும் அருந்துவதற்குக் கொடுத்தலும்
(4) தலை நிமிர்ந்திருக்குமாறு அமரச்செய்து காற்றுப்பட விசிறுதல்

23)  இக்குறியீடு குறிப்பது;

(1) நொருங்கக் கூடியது (2) இலங்கை மத்திய வங்கி
(3) சிற்றுண்டிச்சாலை (4) இலங்கை மின்சார சபை

24) உடலுக்குத் தேவையான சக்தியை வழங்குவதில் செல்வாக்குச் செலுத்தும் உணவுச் சோடி;

(1) வாழைப்பழம், நெத்தலிக் கருவாடு (2) மாஜரின், நெய்
(3) கோவா, கரட் (4) தீட்டாத அரிசி, விளாம்பழம்

25) தேசப்படங்களில் பாலத்தைக் காட்டுவதற்குப் பயன்படும் நிறம் எது?

(1) சிவப்பு (2) நீலம் (3) கறுப்பு (4) கபிலம்

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைட்டிங்கேலை நினைவுகூர்வதற்காக உருவான தாதியர் தினம்

சர்வதேச தாதியர் அமைப்பின் இலச்சினை



'தமது உயிரைக் காப்பாற்ற வந்த தேவதையாகவே அப்பெண்ணை அங்கிருந்த ராணுவ வீரர்கள் அனைவரும் கருதினர். அன்றைய காலப்பகுதியில் க்ளோரஃபோம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் அதனைப் பயன்படுத்தி நோயாளிகளை மயக்க முறச் செய்து சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளும் செயற்பாடு ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. எனவே, சத்திரசிகிச்சைகளை எதிர்கொள்வதனை விட, மரணிப்பதே மேல் என்று ராணுவ வீரர்கள் கருதினர். ஆனால், அந்தப் பெண் அருகில் இருக்கும்போது மட்டும் ராணுவ வீரர்கள் சத்திரசிகிச்சைகளை தயக்கமின்றி எதிர்கொண்டனர்'



க்ரிமியன் போரில் காயமடைந்த வீரர்களுக்கு ஃப்ளோரன்ஸ் சிகிச்சையளிப்பதை சித்தரிக்கும் ஓவியம் ஒன்று

அப்பெண் இரவில் விளக்கு ஒன்றினை கையில் ஏந்தியபடியே, நோயாளிகளிடம் சென்று அன்புடனும் மிகுந்த அக்கறையுடனும் கருணையுடனும் நோயாளிகளின் நலன் விசாரிப்பாள். அதனால், அவளை 'விளக்கேந்திய பெருமாட்டி' (Lady with the lamp) என்று அங்கிருந்த அனைவரும் அழைத்தனர். அவள் தனது முழு நேரத்தையும் நோயாளிகளின் நலன்களுக்காகவே செலவழித்தாள். அப்பெண்ணின் பெயர்தான் 'ஃப்ளோரன்ஸ் நைட்டிங்கேல்' . இப்பெண்ணை

மேற்கொண்டிருந்தபோதே அவர் பிறந்தார். இதனால், பிறந்த நகரின் பெயரே அவருக்கு சூட்டப்பட்டது. செல்வந்தக் குடும்பத்தில் பிறந்த இக்குழந்தைக்கு எதிலுமே குறைகள் இருக்கவில்லை. எனினும், பருவ வயதை அடையும்போது, ஃப்ளோரன்ஸிற்கு செல்வத்தின் மீதான நாட்டம் குறைவடையத் தொடங்கியது. தான் ஒரு தாதியாகி நோயாளிகளுக்கு பரிவுடன் உதவி செய்ய வேண்டும் என்பதையே அவர் மிகவும் விரும்பினார்.

எனினும், அன்றைய சமூக அமைப்பில் தாதியர் சேவைக்கு சிறப்பான அங்கீகாரம்

## மே 12: சர்வதேச தாதியர் தினம்

நினைவுகூரவும் அவரது சேவையை கௌரவப்படுத்துமுகமாகவே ஒவ்வொரு வருடமும் மே மாதம் 12 ஆம் திகதி 'சர்வதேச தாதியர் தினம்' அனுஷ்டிக்கப்படுகின்றது.

### நைட்டிங்கேல்

இவர்,நைட்டிங்கேல் தம்பதியரின் இரண்டாவது குழந்தையாக 1820 மே மாதம் 12 ஆம் திகதி இத்தாலியின் ஃப்ளோரன்ஸ் நகரில் பிறந்தார். நைட்டிங்கேல் தம்பதியினர் ஃப்ளோரன்ஸ் நகரில் சுற்றுலாப் பயணம்

எதுவும் இருக்கவில்லை. இதனால், ஃப்ளோரன்ஸின் இந்த முடிவில் அவரின் பெற்றோர் அதிருப்தி கொண்டனர். எனினும், ஃப்ளோரன்ஸ் தனது முடிவிலிருந்து மாறவில்லை. இறுதியில் பெற்றோரின் அனுமதியுடன் ஜேர்மனி -கெய்ஸர்வேர்த்தில் உள்ள தாதியர் பயிற்சிப் பாடசாலையில் இணைந்தார்.அங்கு தாதியர் பயிற்சி முடிவுற்றவுடன் மீண்டும் தாய்நாடு திரும்பிய அவர், ஹாலி எனும் வீதியில் அநாதரவான நிலையில் காணப்பட்ட பெண்களுக்கு உதவும் முகமாக, அமைக்கப்பட்டிருந்த இல்லம் ஒன்றின் நிர்வாகியாக நியமனம் பெற்றார். இதுவே அவரது முதல் சேவையாக அமைந்தது. இச்சந்தர்ப்பத்திலேயே 'க்ரிமியன்' யுத்தமும் ஆரம்பமாகியது.

இந்த யுத்தம் ஃப்ளோரன்ஸின் வாழ்வில் பாரிய திருப்பு முனையாக அமைந்தது. இந்த யுத்தத்தில் பிரித்தானியப் படையினர் பலத்த

பின்னடைவினைச் சந்தித்தனர். பல வீரர்கள் படுகாயங்களுக்கு உள்ளானார்கள். சரியான சிகிச்சைகளின்றி இந்த வீரர்கள் அநாதரவான நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதனை பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி ஒன்றின் ஊடாக ஃப்ளோரன்ஸ் அறிந்துகொண்டார்.காயமடைந்த இப்படையினருக்கு உதவும் முகமாக, 1854 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் தன்னுடன் மேலும் உதவித் தாதிகள் 38 பேரை அழைத்துக்கொண்டு ராணுவ வைத்தியசாலைக்குச் சென்றார். அவர் அங்கு சென்றிருந்தபோது, அந்த வைத்தியசாலை மிகவும் மோசமான நிலையில் இருந்தது. எனவே, மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியில் அவர்கள் அங்கு பணிபுரியலாயினர். 1856 இல் போர் ஓய்ந்து, காயமடைந்த வீரர்கள் அனைவரும் குணமடைந்து சென்றதன் பின்னர், ஃப்ளோரன்ஸ் இங்கிலாந்து திரும்பினார். வாழ்நாள் முழுவதும் தாதியர் துறைக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றிய ஃப்ளோரன்ஸ், 1910 ஓகஸ்ட் 13 ஆம் திகதி தமது 90 ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.



ரோஸ்மேரி ப்ரயன்

### தாதியர் நாட்டின் வளமாகும்

இன்றளவில் தாதியர் தொழிலானது மகத்துவம் மிக்க ஒரு தொழிலாகக் கருதப்படுகின்றது. தாதியர் சேவையானது தாதியர் பட்டப்படிப்பு வரை உயர்வடைந்துள்ளமை இத்தொழிலின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது. இலங்கையிலும் தாதியர் பட்டப் படிப்பை பூர்த்திசெய்த தாதிகள் பலர் உள்ளனர். நோயாளிகளைப் பராமரிப்பது மட்டுமன்றி; நாட்டின் சுகாதார நிலைமைகளை மேம்படுத்தல், அதற்குரிய பங்களிப்பைச் செய்தல் என்பனவும் இவர்களின் கடமைகளாகும். சமூகத்தில் உடல் ரீதியிலும் உள ரீதியிலும் ஆன்மீக ரீதியிலும் ஆரோக்கியம் கொண்ட சந்ததியினரை உருவாக்குவதில் இவர்களின் பங்கு அளப்பரியதாகும்.

### சர்வதேச தாதியர் அமைப்பு

தாதியர் தொடர்பான முதல் சர்வதேச அமைப்பாக 'சர்வதேச தாதியர் அமைப்பு' (ICN - International Council of Nurses) உள்ளது. இது 1899 இல் ஆரம்பிக்கப்பட்டது. தற்போதளவில் 135 நாடுகள் இதில் உறுப்புரிமையைப் பெற்றுள்ளன. இலங்கையும் இதன் உறுப்புரிமையைப் பெற்றுள்ளது. இந்த அமைப்பின் தற்போதைய தலைவியாக ரோஸ்மேரி ப்ரயன் என்பவர் கடமையாற்றுகின்றார். தாதியர் சேவையின் திறன் விருத்தி மற்றும் அனுபவம் என்பவற்றை முன்னேற்றுதல், அதற்கான ஆலோசனைகளை வழங்குதல், கொள்கைத் திட்டமிடல் போன்ற பல்வேறு செயற்பாடுகள் இந்த அமைப்பினால் மேற்கொள்ளப்படுகின்றன.

### தாதியர் சேவையின் வரலாற்றுக் குறிப்புக்கள் சில...

- கிறிஸ்து வருட ஆரம்பத்தில் கத்தோலிக்க தேவாலயங்களுக்கு தலைமை வகித்த மதத் தலைவர்கள், அந்த தேவாலயங்களில் நோயாளிகளைப் பராமரிக்கும் பணிகளை ஆரம்பித்தனர். பின்னர், அவர்கள் வீடுகளுக்கு சென்று இந்த சேவைகளைச் செய்தனர்.இதனை 'Visiting Nursing' என்று அழைத்தனர். இந்த முறையை ஒத்ததாகவே தற்காலத்தில் பொதுமக்கள் சுகாதார சேவை காணப்படுகின்றது.
- மத்திய காலப்பகுதியில் ஏற்பட்ட சிலுவைப் போருடன் ராணுவத் தாதிகள் (Military Nursing) முறை அறிமுகமானது. யுத்தத்தில் காயமடைந்தவர்களைப் பராமரித்தல், சிகிச்சையளித்தல் போன்றவை இவர்களின் முக்கிய பணியாகும்.
- கி.பி.500 இல் பெண் தாதியர் அமைப்பு உருவானது. பிற்காலத்தில் 'சகோதர தாதியர் சேவை' (Nursing brotherhood) உருவானது.
- 12 ஆம் நூற்றாண்டில் இத்தாலியிலும் பிரான்சிலும் மருத்துவக் கல்லூரிகள் பல ஆரம்பமாகின. இங்கு தாதியர் கல்வியைத் தொடர்வதற்கு பெண்களும் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.
- கி.பி.1500 ஆம் ஆண்டானது தாதியர் சேவையின் இருண்ட காலமாகக் கருதப்பட்டது. இக்காலப் பகுதியில் கல்வி கற்காத-இரக்கமற்ற பெண்கள் தாதிகளாக சேவையாற்றினர்.
- 1822 இல் Theodor Fieidner என்ற மதத்தலைவர் மருத்துவமனைகளை அமைத்தார். அவற்றில், கெய்ஸர்வேர்த் மருத்துவமனையில் பராமரிப்புப் பணிகளில் ஈடுபட்ட பெண்களுக்கு தாதியர் கல்வி புகட்டப்பட்டது. இவர்கள் ஒழுக்கமுடையவர்களாகத் திகழ்ந்தனர். இவர்களுக்கு தமது சேவைக்காக சம்பளம் எதுவும் வழங்கப்படவில்லை.

(இ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'என்டிலோப்' விலங்கினம் ப

**உலகில் ஏராளமான விலங்கினங்கள் வாழ்கின்றன. எனினும், அவற்றில் ஒரு சில விலங்கினங்கள் பற்றியே நாம் பெரும்பாலும் அறிந்து வைத்திருக்கின்றோம். இன்னும் சிலவற்றை தொலைக்காட்சிகளூடாகவோ அல்லது புகைப்படங்கள் ஊடாகவோ பார்த்திருப்போம். அத்தகைய ஒரு விலங்கினம் பற்றியே நாம் இவ்விதழில் உங்களுக்குத் தருகின்றோம். அதுதான் 'என்டிலோப்' (*Antelope*) என அழைக்கப்படும் விலங்கினம்**

## என்டிலோப் மிருகத்தை எவ்வாறு இனங்காணலாம்?

விலங்கியலில் 'என்டிலோப்' என்ற பெயரில் குறிப்பிட்ட ஒரு விலங்கு வகையை நாம் காண முடியாது. எனினும், ஓரளவுக்கு சமமான குண இயல்புகளையும் உருவ அமைப்பையும்கொண்ட பல்வேறு குடும்பங்களைச் சார்ந்த மிருகங்கள் பலவற்றை 'என்டிலோப்' என்று அழைக்கின்றனர்.

ஆனால், என்டிலோப் என மிகச் சரியாகக் கூறக்கூடிய விலங்குகள் வட அமெரிக்காவில் வாழ்கின்றன. 'ப்ரோன்ஹோர்ன்' (Pronghorn) மற்றும் 'ப்ரோன்பக்' (Pronbuck) என்ற பெயர்களில் இவை அழைக்கப்படுகின்றன. 'என்டிலோகெப்ரா அமெரிக்கானா' (Antilocapra americana) என்பது இவற்றின் விலங்கியல் பெயராகும். கால்களில் குளம்புள்ள விலங்கினமே உண்மையான என்டிலோப் ஆகும். அது என்டிலோப் கெப்ரிடே' (Antilop capridae) குடும்பத்தைச் சார்ந்தது. ஏனைய அனைத்து என்டிலோப் மிருகங்களும் 'போவிடே' (Bolidae) குடும்பத்தைச் சார்ந்ததாகும்.

குளம்புள்ள மிருகங்கள் என்பது ஆடு, மாடு, செம்மறியாடு போன்ற பாதங்களில் குளம்புள்ள முலையூட்டி மிருகங்களை இவ்வகைக்குள் அடக்கலாம். இந்த குளம்புள்ள மிருகங்களில் பெரும்பாலானவை 'போவிடே' குடும்பத்தைச் சார்ந்தவையாகும். பொதுவாக, என்டிலோப் மிருகங்களை அவற்றின் வெளித்தோற்றம், அங்க லட்சணங்கள், செயற்பாடுகள், வேகமாக ஓடும் ஆற்றல் என்பனவற்றைக்கொண்டு தனித்துவமாக இனங்காணலாம்.



## என்டிலோப்பின் விசேட தன்மைகள்

பெரும்பாலான என்டிலோப் மிருகங்களின் கொம்புகள் மேல் நோக்கி நீண்டதாகவும் பின்நோக்கி சற்று சாய்ந்ததாகவும் காணப்படும். அவற்றின் தோல் செந்நிறத்துடன்கூடிய கபில நிறம், செம்மஞ்சள், சாம்பல் ஆகிய நிறங்களைக்கொண்டிருக்கும். அடிவயிறு மற்றும் பின்புறம் வெள்ளை அல்லது வேறு நிறத்தில் காணப்படும். சில என்டிலோப்களின் உடலில் அழகிய ரேகைகளும் காணப்படும். ஆபிரிக்காவில் பெரும்பான்மையாக வாழும் இத்தகைய என்டிலோப்கள், ஆசியாவிலும் ஆங்காங்கே காணப்படுகின்றன. பொதுவாக, இந்த என்டிலோப் மிருகங்கள் நீண்ட தூரம் துள்ளிப் பாய்ந்து மிக வேகமாக ஓடும் ஆற்றல் பெற்றவை.

என்டிலோப்களில் ப்ரோன்ஹோர்ன் வகை மணிக்கு 70 கி.மீற்றர் தூரம்வரை ஓடக்கூடியது. அது ஒரு பாய்ச்சலில் 6 மீற்றர் தூரம்வரை பாய்ந்து செல்லக்கூடியது. 'தொம்சன்' வகைக்குரிய என்டிலோப் மணிக்கு 80 கி.மீற்றர் தூரம்வரை வேகமாக ஓடும். 'இம்பாலா' வகை என்டிலோப் 2.4 மீற்றர் உயரத்திற்கு துள்ளிக்குதித்து 10 மீற்றர் அதாவது 33 அடி நீளம் வரை பாயும் வல்லமைகொண்டது.

இவை தமது எதிரியைக் கண்டதும் ஒவ்வொரு பக்கமாக மாறி மாறி ஓடி அவற்றைக் குழப்புவதோடு, அதனைக் களைப்படையவும் செய்கின்றன. இத்திறன் பெரும்பாலான என்டிலோப்களிடம் காணப்படுகின்றது. இதனால் சிறுத்தைகள்கூட என்டிலோப்க்களை இரையாக்கு விடுகின்றன.

## 'ஆட்டியோடக்டிலா' கோத்திரத்

மான், மரை, ஒட்டகம், ஒட்டகச் சிவிங்கி மற்று மிருகங்கள் 'ஆட்டியோடக்டிலா' கோத்திரத்தைச் இந்த ஆட்டியோடக்டிலா கோத்திரத்தின் உறவின ஆட்டியோடக்டிலா கோத்திர மிருகங்களுக்கும் க றது. இதில் என்டிலோப்பின் பாதங்களின் பெருவ பரிணாம வளர்ச்சியின் ஆரம்ப யுகத்திலேயே இ அவை நடுவிரல்களால்தான் நிற்கின்றன. அவை அதாவது, பிளவுபட்ட இரு குளம்புகளாக காட்சி சிறியதாக செயலற்றுக் காணப்படுகின்றன.

## என்டிலோப்கள் வா

பெரும்பாலான என்டிலோப்கள ந்த புல் இருக்கும். அவை புல் மேய்வதற்கும் ஓடி ஆடித் அலைவதற்கும் மிக வசதியான இடமாக இப்புல் திகழ்கின்றன. சில என்டிலோப் வகைகள் புதர்கள் பிரதேசங்களிலும் அடர்ந்த காடுகளிலும் தனித்து

## மூளை வளர்ச்சி மிக்க

என்டிலோப் மிருகங்கள் சிறப்பா மூளை வ அத்தோடு, செவிப்புலத் தேர்ச்சியும் மணத்தை அறியும் திறனையும் கொண்டுள்ளன. மேலும், இ படுகின்ற சுறுசுறுப்பான செயற்பாட்டினால் ஆப கொள்ளும் ஆற்றலும் ஆபத்து நேரத்தில் மிக வி அவை கொண்டுள்ளன்.

## என்டிலோப்பின் கட

தொல்பொருள் ஆய்வுகளினூடாக, கிடைக்கப் என்டிலோப்களின் கடந்தகாலம் குறித்து சில உண் அதன்படி, 'பொவிடே' குடும்பத்தைச் சார்ந்த என் மில்லியன் வருடங்களுக்கு முன்னர் யுரேசியா ம களில் வாழ்ந்ததாகத் தெரியவந்துள்ளது. முற்கா என்டிலோப்கள் ஆபிரிக்காவின் புல்வெளிகளிலு 'சவான்னா' புல்வெளிகளிலும் வாழ்ந்துள்ளன.

## இளவி நத்

சில வகையைச் சேர்ந்த ஆண் என்டிலோப்கள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றி அறிந்துகொள்வோம்

து. இதனால், இரைக்காக விரட்டும்
இரையாக்குவதில் தோல்வி அடைந்து

## ...காத்திரத்துடனான உறவு முறை

...ிங்கி மற்றும் பன்றி போன்ற குளம்புள்ள சில
...த்திரத்தைச் சார்ந்தவையாகும். என்டிலோப்கள்
...ன் உறவினர்களாகக் கொள்ளப்படுகின்றன.
...களுக்கும் கால்களில் குளம்பு காணப்படுகின்
...ரின் பெருவிரல்களும் ஆட்காட்டி விரல்களும்
...ிலேயே இல்லாமல் போய்விட்டன. இதனால்,
...ன. அவை இரண்டு பெரிய நகங்களாக
...ளாக காட்சியளிக்கின்றன. சுண்டு விரல்களோ
...றன.

## ...கள் வாழும் இடம்

...ந்த புல்வெ...ளிலேயே காணக்கூடியதாக
... ஓடி ஆடித் திரிவதற்கும் பெருங்கூட்டமாக
...மாக இப்புல்வெளிகள்
...கள் புதர்கள் நிறைந்த
...ும் தனித்து வாழ்கின்றன.

என்டிலோப்புடன் வாழும் அதேவேளை, வேறு சில வகைக்குரிய ஆண் என்டிலோப்கள் பல பெண் என்டிலோப்களுடன் குழுவாக வாழும். பெண் என்டிலோப்களின் கர்ப்பகாலம் 4 மாதம் முதல் 8 மாதங்கள் வரை வேறுபடும். ஒரு முறையில் ஒரே ஒரு குட்டியை மாத்திரமே ஈன்றெடுக்கும். எனினும், ப்ரோன்ஹோர்ன் மற்றும் நான்கு கொம்புகளைக்கொண்ட என்டிலோப் வகைகள் பெரும்பாலும் ஒரு தடவையில் இரு குட்டிகளை ஈன்றெடுக்கும்.

## என்டிலோப்களின் அங்க லட்சணம்

என்டிலோப் மிருகங்கள் தமது உடல் அளவில் ஒன்றுக்கொன்று வேறுபட்டுக் காணப்படுகின்றன. அவற்றில் மிக உயரமான என்டிலோப், 'ராஜ என்டிலோப்' (Royal Antelope) வகையாகும். சகல ஆண் என்டிலோப்களுக்கும் கொம்புகள் இருக்கும். அதேவேளை, சில பெண் என்டிலோப்களுக்கும் கொம்புகள் காணப்படும்.

சரியாக இனங்காணப்பட்டுள்ள 'ப்ரோன்ஹோர்ன்' வகை என்டிலோப்கள் நடுத்தரமான உடலமைப்பைக் கொண்டன. அதன் உடல் செந்நிறம் கலந்த கபில நிறத்திலும் கழுத்தில் வெள்ளை நிறத்திலான இரண்டு ரேகைகளும் காணப்படும். பின்புறம் வட்ட வடிவத்தில் வெள்ளை நிறக் கறை படிந்தது போல் காட்சியளிக்கும். தமது கூட்டத்துக்கு ஆபத்து ஏற்படும் வேளைகளில் இப்பகுதியானது ஊதிப் பருத்து பளிச்சிடும் வெள்ளை நிறமாக காட்சியளிக்கும். தனது இனத்தைச் சார்ந்த ஏனைய மிருகங்களுக்கு ஏற்படவுள்ள ஆபத்துக் குறித்து எச்சரிக்கவே இவ்வாறு அது செயற்படுகின்றது.

## ராட்சத எலண்ட்

பெரும்பாலான என்டிலோப்கள் ஆடுகள், செம்மறிகள் அளவு

இருந்தபடியே அசைபோட்டு உண்ணும்.

## எதிர்நோக்கும் ஆபத்துக்கள்

நன்றாக வளர்ச்சி அடைந்த என்டிலோப் ஒன்றை வேட்டையாடுவதென்றால் புலிகளுக்கோ சிங்கங்களுக்கோ அல்லது வேறு மாமிச உண்ணிகளுக்கோ இலகுவான காரியமாக இருக்காது. இதனால், அவை வயோதிப என்டிலோப்களையும் குட்டிகளையுமே தமது இரையாகக் கொள்கின்றன. என்டிலோப் இனம் அழிந்துவரக் காரணம்; அவற்றை வேட்டையாடுவதில் குறியாக இருக்கும் மனிதர்களாவர். இவ்வாறு நெருக்கடிகளை எதிர்நோக்கும் என்டிலோப்களில் எலன்ட், ரொவான், வோட்டர் பக், இந்தியாவின் நீல மாடுகள், மலைவாழ் நயாலா மற்றும் பொங்கோ என்பன முக்கியமானவை. இதனால், என்டிலோப்





## ...சி மிக்க என்டிலோப்

...மூளை வளர்ச்...யைக் கொண்டுள்ளன.
...ுமணத்தையும் ...நாற்றத்தையும் நுணுக்கமாக
... மேலும், இயல்பாகவே அவற்றிடம் காணப்
...னால் ஆபத்துக்களை துள்ளியமாக அறிந்து
...தில் மிக விரைவாக தப்பியோடும் திறனையும்

## ...யின் கடந்தகாலம்

... கிடைக்கப்பெற்ற எச்சங்களின் அடிப்படையில்
...து சில உண்மைகள் வெளிவந்துள்ளன.
... சார்ந்த என்டிலோப் மிருகங்கள், சுமார் 65
...யுரேசியா மற்றும் ஆபிரிக்காவின் புல்வெளி
...ாது. முற்காலத்தில் அதிக எண்ணிக்கையிலான
...வெளிகளிலும் சமவெளிகளிலும் குறிப்பாக
...ந்துள்ளன.

## ...னவிருத்தி

...டிலோப்கள் ஒரு பெண்

சிறியதாக இருந்தாலும் தென்னாபிரிக்காவின் கலஹாரி பாலைவனத்தில் உள்ள 'எலன்ட்' வகையைச் சார்ந்த என்டிலோப்பானது ராட்சத உருவத்தைக்கொண்டது. எனினும், இதன் கொம்புகள் மிகச் சிறியதாக இருப்பதோடு, இவ்வகைக்குரிய என்டிலோப்கள் சாதுவான குணாம்சத்தைக்கொண்டு விளங்குகின்றன.

## மிகச் சிறிய என்டிலோப்

மிகச் சிறிய என்டிலோப் வகைதான் 'டேன்ட் ரோயல்' இவையும் ஆபிரிக்காவில்தான் வாழ்கின்றன. தோள் வரையிலான அதன் உயரம் 25 செ.மீற்றர் அதாவது 10 அங்குலம் மாத்திரமே. இதன் நிறையோ 2.7 கிலோ கிராம் ஆகும். டேன்ட் ரோயலின் கொம்பு 1 அங்குலத்திலும் குறைவான நீளமுடையது.

## என்டிலோப்களின் உணவு

என்டிலோப் ஒரு தாவர உண்ணியாகும். புல் மற்றும் பல்வேறு தாவர வகைகளை உணவாகக்கொள்ளும் அவற்றின் நாக்கு மிக நீளமானதாகவும் பெரிதாகவும் காணப்படுவதால், தாவரங்களை இலகுவாக பற்றிப் பிடித்து விரைவாக அவற்றை உண்ணும். பின்னர், அந்த உணவை மீட்டு ஓய்வாக

மிருகங்களுக்கு விலங்குகளுக்கான புகலிடங்களில் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இரஞ்சித் ஜெயகர்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சூழல் காத்திடுவோம்

சுற்றுச் சூழல் காத்திடுவோம்
சுகமாய் வாழ வழி வகுப்போம்
வெற்று வார்த்தை இதுவல்ல
விளையும் நன்மையோ பலப்பல...

கண்ட பொருளை எரிவதனால்
காற்று மாசு அடைகிறது...
அண்ட வெளியில் ஓசோனும்
அதிகம் பாதிப்படைகிறது...

மரங்களை வளர்த்திடுவோம்
மண் குளிரச் செய்திடுவோம்
மழையை நன்றே பெற்றிடுவோம்
நற் சுகமாய் வாழ்ந்திடுவோம்....

எஃப்.அஃப்ரா அஸ்கந்,
களு/அல்-ஹம்றா ம.வித்.,
தர்கா நகர்.



## சகுனம் பார்த்து கிணற்றில் விழுந்தவர்

முற்காலத்தில் ஒரு முட்டாள் கிராமவாசி இருந்தார். இவரது மனைவியோ நல்ல புத்திசாலி. இவர்களுக்கு அதிகளவான சேற்று நிலங்கள் சொந்தமாக இருந்தன. வீட்டுத்தோட்டத்தில் காய்கறிகள், கிழங்கு வகைகள்,வெற்றிலை,பலா, ஈரப்பலா, தென்னை, வாழைமரம் என்பனவற்றையும் பயிரிட்டனர். அத்துடன், வயலை நன்கு உழுது பயிரிட்டதால் அவர்களின் தேவைக்கு அதிகமாகவே விளைச்சலைப் பெற முடிந்தது. பிள்ளைகளும் இல்லாத இவர்களுக்கு இவையனைத்தும் மிக அதிகமாகவே கிடைக்கலானது. முட்டாள் கிராமவாசியான இவர் எதைச் செய்வதற்கும் நல்ல சகுனம் பார்ப்பார்.

இவர் காலையில் வயலுக்கு செல்வதற்கு முன்னர் சகுனம் பார்த்து, நல்ல சகுனம் அமையாவிட்டால் வீட்டில் தங்கிவிடுவார். கிராமத்தில் ஏனைய உழவர்கள் எந்தவொரு சகுனமும் பார்ப்பதில்லை. காலம் தாமதியாது நெல் விதைத்து பயிர் செய்வர். இந்த முட்டாள் கிராமவாசி மட்டும் நல்ல சகுனம் பார்த்த வண்ணம் இருப்பதனால், கால தாமதத்தில் பயிரிடுவதோடு, பல நேரங்களில் வயல் அழிவடையும் நிலையும் ஏற்படும். முயற்சியுடைய இவரது மனைவி தன் கணவரிடம் காணப்படும் மூடநம்பிக்கையைக் கண்டு மனக்கவலை அடைந்தாலும் குடும்பத்தை கொண்டு நடத்தும் தனது சிறந்த பணியிலிருந்து சிறிதும் தவறவில்லை.

வழமைபோன்று அன்றும் உழவர்கள் அனைவரும் களைப்புப் பாராது வயலில் வேலை செய்ய ஆரம்பித்தனர். சகுனம் பார்த்த முட்டாள் கிராமவாசி வேலையை ஆரம்பிப்பதற்காக பகல் நேரத்தில் வயலுக்குச் சென்றார். அவ்வேளை அனைவரும் நெல்லை விதைத்து முடித்திருந்தனர். வீடு திரும்பியவர் மீண்டும் ஒரு நல்ல சகுனம் வரும்வரை காத்திருந்தார்.




எனினும், நல்ல சகுனம் வராமையினால் இரவு முழுவதும் விழித்திருந்தார். நல்ல சகுனம் வந்ததும், இருள் சூழ்ந்த நேரத்தில் வயலுக்கு செல்லலானார்.

இருளும், தூக்க மயக்கமும் அவரை பாழடைந்த கிணற்றில் தள்ளியது. ''காப்பாற்றுங்கள்'' எனக் கத்தினார். ஊரார் கிணற்றை சூழ்ந்தனர் இவரது மனைவியோ ''இவரை வெளியில் எடுக்காதீர்கள் நான் சென்று இவரை வெளியில் எடுக்க நல்ல சகுனம் பார்த்து வருகின்றேன்'' என்று கூறிச் சென்று இரண்டு மணி நேரத்தின் பின் திரும்பி வந்தார்.அதன் பின்னரே, முட்டாள் கிராமவாசி வெளியே எடுக்கப்பட்டார். அன்றிலிருந்து அவரிடம், சகுனம் பார்க்கும் மூடநம்பிக்கை காணாமல் போய்விட்டது.

சாஜிதா எம்.நஸீர்,
பறகஹதெனிய.

## சர்வதேச குறியீடுகள்

| | |
|---|---|
| ★ வெண்புறா ஒலிவ் மரத்தின் இலை | - சமாதானம் |
| ★ சிவப்புச் சக்கரம் | - வளர்ச்சி |
| ★ சிவப்பு விளக்கு | - மருத்துவமனை, ஆபத்து, நிறுத்து |
| ★ கறுப்புக் கொடி | - எதிர்ப்பு, சோகம், மரணம் |
| ★ மஞ்சள் கொடி | - தொற்று நோய் |
| ★ செஞ்சிலுவை | - மருத்துவ உதவி |
| ★ செம்பிறை | - அரபு நாடுகளின் செம்பிறைச் சங்கம் |
| ★ பச்சை விளக்கு | - அனுமதி |



## நளவெண்பா

செந்தமிழ் என்னும் இலக்கியவானில் செங்கதிர் வீசும் சீர்மிகு பகலவனாகத் திகழ்வது நளவெண்பாவாகும். இதனை வடமொழிப் பெரும் காவியம் என்றும் கூறலாம். இந்நூலானது சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலி நீங்கு காண்டம் என மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டு சிறந்து விளங்குகின்றது. நளவெண்பாவை, வான் புகழ் கொண்ட புலவர் திலகராம் புகழேந்திப் புலவர், இயற்றினார். இப்புலவர் பெருமான் வாழ்ந்தகாலம் 'தமிழின் பொற்காலம்' என வர்ணிக்கப்படுகிறது. அப்பொற்காலத்தில் எழுதப்பட்ட 'நளவெண்பா' ஒப்பற்ற தமிழ்க் கருவூலமாகத் திகழ்கின்றது.

நிடத நாட்டு மன்னன் நளனினதும் விதர்ப்ப நாட்டு மன்னன் விமனின் மகள் தமயந்தியினதும் நற்சரிதையை இந்நூல் மிகவும் அழகாகக் கூறுகின்றது. தமிழ் நயமும் மன அமைதியும் தரும் நளவெண்பா கன்னித்தமிழ் உள்ளவரை நின்று நிலவும் என்பது உறுதி. எனவே, நாமும் தமிழ் மொழியின் சிறப்பையும், நளவெண்பாவின் வரலாற்றையும் அறிந்துகொள்வோம்.

பாத்திமா தஹ்ர...
மாறை அந்...
மு.ம.ம.வித்., வெலிகம.



## கல்வி

நீங்கள் கற்றிடும் காலகட்டத்தில், உங்களுக்குப் பல இடையூறுகள் வரலாம். ஆனால், ஒரு போதும் உங்கள் கல்வியை விடாதீர்கள். நாம் கற்றிடும் கல்வியே நம் வாழ்விற்கான முதல் அஸ்திவாரம். அந்த அஸ்திவாரத்தை நாம் எவ்வளவு ஆழமாகப் போடுகின்றோமோ அந்தளவுக்கு நம்முடைய எதிர்கால சந்தோஷம் என்னும் கட்டடம் பலமாக இருக்கும். ஆகையால் கல்வி கற்பீர்! கற்றபடி என்றும் நடப்பீர்!

கற்கை நன்றே! கற்கை நன்றே!
பிச்சை புகினும் கற்கை நன்றே!

ஃபாத்திமா ரிக்காஸா,
அமினா மகளிர் தே.கல்.,மாத்தளை.

## இரத்த ஓட்டத்தைக் கண்டுபிடித்தவர்



1578 முதல் 1657 வரை வாழ்ந்த ஆங்கில மருத்துவ விஞ்ஞானியான வில்லியம் ஹார்வி என்பவர் மனித உடலில் குருதி பாயும் வழிமுறைகளை நீண்ட நாட்களாக அவதானித்து வந்தார். நவீன கருவிகள் இல்லாத காலத்தில் இதயம், நாளம், நாடி வழியாக குருதி ஒரே திசையில் பாய்கின்றது என்றும் இதயத்திலும் நரம்புகளிலும் ஒரு வழி வால்வுகள் இருப்பதாகவும் அது எதிரெதிர் திசைகளில் இரத்தம் பாய்வதைத் தடுக்கிறது என்றும் கண்டறிந்தார். நரம்புகளும் சிறு சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதாகவும் ஹார்வி நம்பினார்.

தனது கருத்துக்களை 1628 ஆம் ஆண்டு புத்தகமாக எழுதி வெளியிட்டார். ஆரம்பத்தில் இதைப் படித்தவர்கள் இக்கருத்துக்களை நம்பவில்லை. அதன் பின்னர் இவர் கூறியது சரியென்பதை இத்தாலிய உடற்கூற்று வல்லுனரான மார்செல்லோ மால்பிகி என்பவர் நுணுக்குக் காட்டியின் மூலம் நிரூபித்தார்.



எஸ்.எம்.பயாஸ்,
அ/நாச்சியாதீவு
மு.ம.வித்., நாச்சியாதீவு.



## கப்பல்

கப்பல் நல்ல கப்பலாம்
கடலில் செல்லும் கப்பலாம்...

அக்கரைக்கு செல்லவே
ஆட்கள் ஏற்றும் கப்பலாம்...

சாமான் ஏற்றும் கப்பலாம்
சண்டை செய்யும் கப்பலாம்...

கப்பல் நீரில் பலவிதம்
கடலின் மீது திரியுமாம்....

தூர தேசம் செல்லுமாம்
துறைமுகத்தில் தங்குமாம்....

கலங்கரை விளக்கினால்
கரையைக் கண்டு சேருமாம்...

எம்.அஸ்ஜத்,
அந்தூர் தே.பாடசாலை.

## இலங்கை மன்னர்களும், அவர்கள், கட்டிய குளங்களும்



| | | |
|---|---|---|
| 1 | பண்டுகாபயன் | - அபய வாவி (பகவத்குளம்) |
| 2. | தேவநம்பியதீசன் | - திஸா வாவி |
| 3. | மகாசேனன் | - மின்னேரியா, கவுடுலுவாவி, குருளுவாவி |
| 4. | தாதுசேனன் | - கலாவாவி |
| 5. | 2 ஆம் முகலன் | - பதவியாக்குளம், நாச்சதுவக்குளம் |
| 6. | 1 ஆம் அக்கபோ | - மாமருவக்குளம், குருந்திக்குளம், சிறிவட்டமானக்குளம் |
| 7. | 2 ஆம் அக்கபோ | - கந்தளாய்குளம், கிரிந்தலைக்குளம் |
| 8. | 1 ஆம் பராக்கிரமபாகு | - பராக்கிரம சமுத்திரம் |

எம்.ஆர்.எஃப்.ஸைனியா, [illegible] ம.வித்., குருணாகலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நீதிமன்ற அமைப்பு முறைகள்



(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

2. மேல் உள்ளவற்றினால் வழங்கப்படும் கட்டளைகள், நியமனங்கள் தொடர்பான திருத்தங்களை செய்தல்.

3. மாகாணத்திற்கு மாத்திரம் வரையறை செய்யப்பட்ட விடயங்களுக்கு ஏற்புடையதாக, றிட் Writ கட்டளைகளை வழங்கும் அதிகாரங்கள்.

## மாவட்ட நீதிமன்றம் (District Court)

இலங்கையில் செயற்படுத்தப்படும் முதற்கட்ட குடியியல் நீதிமன்ற அதிகாரங்களை செயற்படுத்துகின்ற நீதிமன்றம் இதுவாகும். இதில் பின்வரும் விடயங்கள் முக்கியமானவையாக கருதப்படுகின்றன.

✱ சகல குடியியல் வருமானம் நம்பிக்கைச் சொத்து கடன்களைச் செலுத்துவதற்கு வகையற்றுப் போதல் இறுதி விருப்ப ஆவணம் (Testament) போன்ற விடயங்களுக்கு கீழ் வரும் வழக்குகளை விசாரணை செய்ய முடியும்.

✱ திருமணப் பிணக்குகள் தொடர்பான சகல விடயங்களையும் விசாரித்தல்.

✱ புத்திசுவாதீனமுற்றவர்கள் மற்றும் மனநோயாளர்களின் சொத்துக்களின் காவலராக செயற்படுதல்.

✱ இளம் பராயத்தவர்கள் தொடர்பாக, உயர்ந்த பாதுகாவலராக கருதப்படுவதும் இந்நீதிமன்றங்களே.

## நீதவான் நீதிமன்றம் (Magistrate Court)

இதன் ஊடாக, முதற்கட்ட குற்றவியல் நீதிமன்ற அதிகாரங்கள் செயற்படுத்தப்படுகிறது. இதில் பின்வரும் விடயங்கள் முக்கியமானவையாகும்.

1. 1,500 ரூபாவுக்கு மிஞ்சாத குற்றப்பணம் செலுத்த வேண்டிய குற்றங்கள்

2. இரண்டு வருடங்களுக்குக் குறையாத சிறைத்தண்டனையை விதிக்கும் குற்றங்கள் இதற்கு மேலதிகமாக, ஏதாவதொரு சட்டத்தின் பிரகாரம் காணப்படும் குற்றம் தொடர்பான வழக்கை விசாரிக்கும் அதிகாரங்களும் உண்டு. உதாரணமாக, மோட்டார் வாகனப் போக்குவரத்து கட்டளைகள் சட்டத்தின்கீழ் வழக்கை விசாரணை செய்வதற்கும், மிகவும் பாரதூரமான தண்டனையை விதிப்பதற்கும் நீதவான் நீதிமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

## ஆரம்ப நீதிமன்றம் (Primary Courts)

இந்த நீதிமன்றங்களினால் முதல் சந்தர்ப்பத்தில் சிறு குற்றவியல் நீதிமன்ற அதிகாரங்கள் மற்றும் சிறு குடியியல் நீதிமன்ற அதிகாரங்கள் செயற்படுத்தப்படுகிறது. இதில் பின்வரும் விடயங்கள் முக்கியமானவை.

1. நஷ்டஈட்டுக் கோரிக்கையை வென்றெடுக்கவும், அல்லது 1,500 ரூபாவுக்குக் குறைவான பெறுமானமுள்ள தொகையை செலுத்தத் தவறும் சந்தர்ப்பங்களில்....

உள்ளூராட்சி மன்றங்களின் துணைச் சட்டங்களை செயற்படுத்தல், அவற்றின் வருமானங்களைப் பெறுக்கொள்ள உதவுதல் போன்றன.

2. காணிப் பிரச்சினை தொடர்பான குற்றங்கள்.

நாட்டின் அதிகமான நீதிமன்ற வலயங்களில் ஆரம்ப நீதிமன்றங்கள் செயற்படுத்தப்படாமையினால் அந்த அதிகாரங்களை நீதவான் நீதிமன்றங்கள் செயற்படுத்தி வருகின்றன. மேலும், இதற்கு மேலதிகமாக வேறு நியாய சபைகளும், இலங்கையில் அமுலில் உள்ளன. அதில், தொழில் நியாய சபைகள் (Labour Tribunal) மத்தியஸ்த சபை, (Mediation Board ) காதி நீதிமன்றங்கள் என்பன அடங்குகின்றன. இவை மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி அனைவரும் ஜனநாயக மரபுகளுக்கு அமைவாக நடந்து கொள்வதற்காகவும் இந்த நீதிமன்ற அமைப்பு முறைகள் தொன்றுதொட்டு நடைமுறையில் இருந்து வந்துள்ளன.

தொகுப்பு: எஸ்.எல்.மன்சூர்

# சாதனையாளர்

## 'மின்சாரப் பாய்வு'

## ஸ்டீபன் கிரே

'மின்சாரப் பாய்வு' பற்றி பல ஆக்கபூர்வமான தகவல்களை முதன்முதல் உலகிற்கு வெளியிட்டவர் ஸ்டீபன் கிரே என்பவராவார். இவர் 1666 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர். 1650 ஆம் ஆண்டளவில் ஜேர்மனியைச் சேர்ந்த வான்கூர்க்கி என்பவர் தேங்கும் மின்னூட்டக் கருவி ஒன்றை உருவாக்கி மின்னூட்டம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டார். அவருக்குப் பின் 1768 இல் அதேபோன்ற வேறொரு கருவியை இங்கிலாந்தைச் சேர்ந்த ஜேனி ராம்ஸ்டென் என்பவர் உருவாக்கி அக்கருவியில் பல் சக்கரங்களை இணைத்து சற்று வேகமாக சுழலச் செய்து ஆய்வினைத் தொடர்ந்தார்.

ஆனால், வான்கூர்க்கிக்கும் ஜேனி ராம்ஸ்டென் என்பவருக்கும் இடைப்பட்ட காலத்தில் ஸ்டீபன் கிரே அவர்கள் வான் கூர்க்கியின் மின்சாரம் குறித்த ஆய்வுகளை ஆர்வத்துடன் ஆராய்ந்தார். எனினும், அதனை மென்மேலும் தீவிரமாக ஆராயவேண்டும் எனும் ஆர்வம் அவருக்கு ஏற்பட்டது. ஆனால், நடைமுறை வாழ்க்கையில் ஆய்வில் ஈடுபடுவதற்கு அவரது ஏழ்மைநிலை தடையாக அமைந்தமையால் மேலும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் அளவிற்கு அவரிடம் போதிய வசதிகள் இருக்கவில்லை. எனினும், அவரால் அந்த ஆர்வத்தைக் கட்டுப்படுத்தவும் முடியவில்லை.

இதனையறிந்த அவருடைய நெருங்கிய நண்பரான கிரேவில் வெல்லர், என்பவர் ஸ்டீபன் கிரேயின் ஆய்வுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தார். அவருடைய ஆராய்ச்சிக்கும் தமது



ஒத்துழைப்பையும் வழங்கினார். இதனால், மின்சாரம்; உலோகக்கம்பி, ஊடே பாய்ந்து மின்னூட்டம் பெற வல்லது என்பதை வான் கூர்க்கி முதன்முதலில் உலகிற்கு வெளிப்படுத்தினார். இவற்றின்மூலம் எவ்வளவு தூரம் மின்சாரம் பாயும் என்பதை கண்டறிய ஸ்டீபன் கிரேவும், கிரேவில் வெல்லரும் ஆய்வுகளை மேற்கொண்டனர்.

பல ஆண்டுகள் நடத்தப்பட்ட ஆய்வுகளின் முடிவாக 1729 ஆம் ஆண்டு ஸ்டீபன் கிரேயினால் மிக முக்கியமான இரண்டு முடிவுகள் வெளியிடப்பட்டன.

i. மின்சாரம் ஒரு விநாடிக்குள் எவ்வளவு தூரமானாலும் பாய்ந்து செல்லக்கூடியது.

ii. மின்சாரத்தை மின்காப்பிட்டு (இன்சுலேன்) அனுப்பப்படவேண்டும்.

இவை இரண்டும் மின்சாரம் சம்பந்தமான மிக முக்கியமான தத்துவங்களாக அமைந்தன.

இத் தத்துவத்தின் அடிப்படையில்தான் மின்சார வயர்கள் உருவாக்கப்பட்டன. அதனாலேயே மின்சாரத்தை நீண்ட தூரத்திற்கு எடுத்துச்செல்ல முடிந்தது. தமது ஆய்வுகளின் மூலம் கண்டறிந்த பல உண்மைகளை தொகுத்து நூலாக வெளியிட்ட ஸ்டீபன் கிரே, 1736 இல் தமது 69 ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

ஆர்.ஜே.

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 4109

ஜெ.அபிஷானி, லசாவ் கிட்ஸ் கம்பஸ், மன்னார்.



அங்.இல: 4110

ச.துஷாந்த், இறம்பைக்குளம் ம.ம.வித்., வவுனியா.



அங்.இல: 4111

ஜீ.எம்.றிம்ஸான், அஹமட் வித்., வாழைச்சேனை-05.



அங்.இல: 4112

எம்.ஏ.ஏ.ஸஃப்னாஸ், டீ.எஸ்.சேனாநாயக்க கல்., கொழும்பு-07.



அங்.இல: 4113

எம்.எச்.ஆயிஷா, பதுரியா மத்.கல்., அரனாயக்க.



அங்.இல: 4114

ஜெ.பிரியங்கன், அருணோதயக் கல்., யாழ்ப்பாணம்.



அங்.இல: 4115

சு.மகிந்தன், புனித கென்றியரசர் கல்., யாழ்ப்பாணம்.



அங்.இல: 4116

சி.மிலோஜினி, அராலி சரஸ்வதி ம.வித்., யாழ்ப்பாணம்



அங்.இல: 4117

பெ.நிரோசா, தொட்டுலாகலை த.க.வித்., பதுளை.



அங்.இல: 4118

எச்.எம்.றம்ஷானா, பாத்திமா பாலிகா ம.வித்., திருகோணமலை.

படத்தை இங்கே ஒட்டவும்



விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:................................................

முகவரி:................................................

................................................

பாடசாலை:................................................

வகுப்பு:................................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடத்தலவின்ன மடிகே இங்லிஷ் எகடமி பாலர் பாடசாலையால் அண்மையில் தெஹிவளை மிருகக்காட்சிசாலை மற்றும் காலிமுகத்திடல் போன்ற இடங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட சுற்றுலாவில் கலந்துகொண்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களைப் படத்தில் காணலாம்.

*(படமும் தகவலும்: தலவின்ன எஸ்.ஐ.எம்.நளீம்)*






பசுமலையைச் சேர்ந்த ரகு-கவிதா தம்பதியரின் செல்வப் புதல்வி புவிஷா, 26.04.2011 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் இறைவன் அருளால் பல்கலையும் கற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: அ.சேஸ்திரினி)



ஹெம்மாதகமை- கொடேகொடையைச் சேர்ந்த றிகாஸ்- றிஹானா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா ஸைனப், 27.04.2011 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் வளமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: றிஸ்வானா ரவுஃப்)



நாவலப்பிட்டி- லபுவெல்கொட்டுவையைச் சேர்ந்த பிஸ்தாமின்- மும்தாஜ் பேகம் தம்பதியரின் செல்வப் புதல்வி சுலபா, 01.05.2011 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: பரீனா ஆப்தீன்)



இறக்குவானையைச் சேர்ந்த சப்வான்-ஜெசீமா தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹமட் சாஹீத், 05.05.2011 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: பர்ஹானா)



கல்பிட்டி-அல்மனாரைச் சேர்ந்த முபாரக்-றிஸானா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா றிஸ்கா, 13.05.2011 அன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரைக் குடும்பத்தினர் உட்பட, உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



யாழ்ப்பாணம்-தொல்புரத்தைச் சேர்ந்த ரவிச்சந்திரன்-மகாலட்சுமி தம்பதியரின் செல்வப் புதல்வி ர.சிவகௌரி, 14.05.2011 அன்று தனது நான்காவது பிறந்ததினத்தைக் கொண்டாடவுள்ளார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அம்மன் அருளால் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.






சிவதர்சினி.
கலைமகள் த.ம.வித்.,
ஹொப்டன்.



எம்.மகேஷிகா,
அல்-முபாரக் தே.பாட.,
மல்வானை.



எஃப்.ஹனா,
பறகஹதெனிய தே.பாட.,
குருநாகல்.



என்.ஜெனித்தா,
றோ.க.த.க.பாட., மன்னார்.



எஃப்.ரிஸ்மா,
கேகாலை முஸ்லிம் ம.வித்.,
கேகாலை.



எம்.பர்ஸான்,
உஸ்வதுன் ஹஸனாஹ் மு.வித்., கட்டுகொட.



ஹஸ்னா லரீப்,
பாலர் யேசு கன்னியர் மடம்,
இரத்தினபுரி.



எம்.அஜ்மல்,
நாங்கல்ல மு.ம.வித்.,
மங்கெதர.



எஃப்.ரிமாஸா,
மிராஹவத்தை மு.வித்.,
பண்டாரவளை.



லோகேஸ்வரி,
ஹல்வத்துறை த.வித்.,
புளத்சிங்கள.



ஆர்.காஞ்சனா,
உந்துகொடை த.வித்.,
உந்துகொடை



ஆர்.டி.பாசில்,
பூவல்ல மு.க.வித்.,
வீரப்பொக்குண.




நாம் கடந்த வாரம் க.பொ.த. சா/தரப் பரீட்சை ஓவியபாட வினாத்தாள்களில் வினாத்தாள் I பற்றி நோக்கினோம். இவ்விதழில் வினாத்தாள் II குறித்து நோக்குவோம்.

சுதந்திரமாக ரேகைகள் மூலம் ஓவியம் வரைதலும் வர்ண ஓவியங்களை ஆக்குதலும் இரண்டாம் வினாப் பத்திரத்தின் அடிப்படையாகும். இந்த வினாப்பத்திரத்திற்கு 30 புள்ளிகள் வழங்கப்படும். அதன்படி:

- ரேகைகளை கையாளும் திறன் மற்றும் நிபுணத்துவம் (05 புள்ளிகள்)
- பென்சில்,பேனா, தூரிகை, வர்ணக்கலவை போன்றவற்றிற்கு (05 புள்ளிகள்)
- சரியான அளவுத்திட்டம் (05 புள்ளிகள்)
- முப்பரிமாணம், இருபரிமாணம், நிழல் காட்டும் திறன் (05 புள்ளிகள்),



- பின்னணித் தலைப்புக்கேற்ற வெளிப்பாட்டுத் தன்மை, குணபாவங்கள், முடிவுறல்கள் (தூரதரிசனம்) போன்ற அம்சங்கள் (05 புள்ளிகள்)
- ஓவியத்தின் பூரணத்துவம், முடிவு, சிறந்த அமைப்பு போன்ற அம்சங்களுக்கு (05 புள்ளிகள்)

என்ற ரீதியில் மொத்தப் புள்ளி பிரிக்கப்படும்.

மேற்பார்வையாளரால் உங்கள் முன்வைக்கப்படும் பொருட்கூட்டத்தை (தொகுதியை) பார்த்து வரைதல் இந்த வினாப்பத்திரத்தில் பிரதான அம்சமாகும். பார்த்து வரைவதற்கு நாம் அன்றாடம் காணும் பொருட்கள் அதிகமாக உள்ளடக்கப்பட்டிருக்கும். 6 அல்லது 7 பொருட்கள் ஒரு மேசையின் மேல் உங்கள் கண் மட்டத்திற்குகீழ் அமையும்படி வைக்கப்பட்டு, மாணவர்கள் அரைவட்டத்தில் அமர்ந்து வரையும்படி வேண்டப்படுவார்கள்.இப்பொருட்களை அமரும் கோணத்தில் உங்களுக்குத் தெரியும் விதத்தில் வரைதல் வேண்டும். இங்கு ஒரு பொருளின் பாகம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கோணத்தில் தெரியும் என்பதை மறந்து விடாதீர்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேமிப்பின் சிறப்பு

அலுவலகத்தில் வேலைபார்க்கும் பாலனுக்கு, இருபதாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கியும் அது குடும்பத்தைக் கொண்டு நடத்தப் போதுமானதாக இருக்கவில்லை. பக்கத்து வீட்டு பரமசிவம் 'கைவண்டி இழுத்துப் பிழைக்கும் தொழிலாளி அவனுக்கு நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர். அனைவரும் பாடசாலையில் கல்வி கற்கின்றார்கள். ஆயினும், பரமசிவமும், அவன் மனைவி பார்வதியும் எவ்வளவு சந்தோஷத்துடன் வாழ்கிறார்கள்!

''நான் கைநிறைய சம்பளம் வாங்குகின்றேன். மனைவியும் அருகில் வசிப்பவர்களுக்கு ஆடை தைத்துக்கொடுத்து சம்பாதிக்கிறாள். ஆனால், குடியிருக்க ஒரு சிறிய வீடுகூட வாங்க முடியவில்லையே.....! பரமசிவம் கூலிவேலை பார்த்தே சொந்தமாக வீடு வாங்கி இருக்கிறான். அவன் எப்படி அதனை வாங்கினான்?' என்று பெரும் குழப்பத்துடன் வீதியில் நின்றுகொண்டிருந்தான் பாலன். அப்போது அந்த வழியாக பரமசிவம் கைவண்டியை தள்ளிக்கொண்டு வந்தான். பாலன், அவனிடம் தன் குடும்பக் கஷ்டத்தைக் கூறினான்.

''மாதம் இருபதாயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறேன். இரண்டே குழந்தைகள் தான். ஆனாலும், என்னால் குடும்பச் செலவை சமாளிக்க முடியவில்லை. நீ எப்படிச் சமாளிக்கிறாய்?'' என்று பாலன் அவனிடம் கேட்டான்.

''வரவைக் கணக்கிட்டுத்தான் நான் செலவு செய்கிறேன். அதிலும் அத்தியாவசியமான செலவுகளை மட்டும் கவனித்துக்கொண்டு, எஞ்சியதை சேமித்து வைத்து அவசியமான பொருட்களை வாங்குகிறேன். 'சிறுதுளி பெரும் வெள்ளம்' போல சேமிப்புத்தான் என்னை இந்தக் குறைந்த கூலியிலும் உயர்வாக்கி இருக்கின்றது. தேடிய பொருளைச் செலவிடும் முறை பற்றித் திருக்குறளில் உள்ள கருத்தை என் மகன் ஒருமுறை கூறினான்.

''ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை''

என்பதுதான் அந்தக் குறள். அதாவது, வரவுக்கு மேல் செலவிடுவது பெருந்தவறு. வரவும், செலவும் சமமாக இருக்கலாம். ஆனால், வரவைவிட, செலவு சிறிதளவும் அதிகமாகக் கூடாது. அப்படி இருந்தால் துன்பம்தான் மிஞ்சும்.

நமது செலவுகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். இன்றியமையாத குடும்பச் செலவு, எதிர்பாராத வகையில் நேரும் செலவு.

முதல்வகைச் செலவு தவிர்க்க முடியாதது. இரண்டாம் வகைச் செலவுகளைச் சமாளிக்க சிறுசேமிப்புத் தேவை. இவ்வாறு நாம் சேமிக்கும் சிறிய தொகை, படிப்படியாக வளர்ந்து பெருந்தொகையாகி விடுகிறது.

இவ்வாறுதான் நானும் குறைந்த செலவில் குடும்பம் நடத்தி சேமிப்பால் உயர்ந்து வருகிறேன். என் மகன் படித்ததை என்னிடம் கூறியதால்தான் நானும் புரிந்துகொண்டு செயற்பட்டேன்'' என்றான் பரமசிவம்.

தானும் இனிமேல் அவ்வாறு சேமித்துச் செயற்பட வேண்டும் என முடிவெடுத்தபடி பரமசிவத்திற்கு நன்றி கூறி விடைபெற்றான் பாலன்.

''வரவைக் கணக்கிட்டுத்தான் நான் செலவு செய்கிறேன். அதிலும் அத்தியாவசியமான செலவுகளை மட்டும் கவனித்துக்கொண்டு, எஞ்சியதை சேமித்து வைத்து அவசியமான பொருட்களை வாங்குகிறேன். 'சிறுதுளி பெரும் வெள்ளம்' போல சேமிப்புத்தான் என்னை இந்தக் குறைந்த கூலியிலும் உயர்வாக்கி இருக்கின்றது''



# ஸ்கூட்டர் கற்றுத்தந்த பாடம்



வீட்டின் முன் நின்ற தன்னுடைய ஸ்கூட்டரை இயக்க முற்பட்டார் துரைராஜ். அது இயங்க மறுத்தது. ஸ்கூட்டரை ஒரு பக்கமாகச் சாய்த்து வைத்தார். பின்னர் மீண்டும் ஸ்கூட்டரை இயக்க முயன்றார். அப்போதும் அது இயங்க மறுத்தது. உதைத்து, உதைத்து ஸ்கூட்டரை இயக்க முயன்றும் அது இயங்கவேயில்லை. ஸ்கூட்டரில் பெற்றோல் இல்லை என்பது அவருக்குப் பின்னர்தான் புரிந்தது. உடனே ஸ்கூட்டரை வீட்டின் ஓரமாக நிறுத்திவிட்டு, பக்கத்து வீட்டுக்காரரிடம் சைக்கிளை வாங்கிக்கொண்டு பெற்றோல் வாங்கிவரப் புறப்பட்டார்.

அப்போது நடந்த அனைத்தையும் தன் வீட்டுப் படிக்கட்டுகளில் அமர்ந்தபடியே, பார்த்துக்கொண்டிருந்தாள் செரீன். அவள் அந்த ஊரில் உள்ள பள்ளியில் நான்காம் வகுப்புப் படிக்கும் மாணவி.

சிறிது நேரத்தில் துரைராஜ் ஒரு கேனில் பெற்றோல் வாங்கி வந்தார். ஸ்கூட்டரின் பெற்றோல் கொள்கலனைத் திறந்து பெற்றோலை ஊற்றினார். பின்னர் ஸ்கூட்டரை இயக்க அது உடனே இயங்கியது.

அங்கிருந்த செரீனுக்கு 'டாட்டா' காட்டியபடியே ஸ்கூட்டரை ஓட்டிச் சென்றார் துரைராஜ்.

பயணம் செய்வோர் முன்கூட்டியே பயணத்துக்குத் தேவையான விடயங்களில் அதிக கவனமெடுத்துக் கொண்டால், தடையின்றிப் பயணம் செய்யலாம். ஸ்கூட்டரின் பெற்றோல் கொள்கலனை மனித மூளையாகவும், அதில் ஊற்றப்படும் பெற்றோலைக் கல்வி மற்றும் பொது அறிவாகவும் கற்பனை செய்துகொண்ட செரீன், தானும் கல்வியோடு சேர்ந்து பொது அறிவையும் வளர்த்தபடியே வாழ்க்கைப் பாதையில் பயணப்பட வேண்டும் என தீர்மானித்தாள். மிகப் பெரிய போதனையைக் கற்றுக்கொடுத்த அந்த ஸ்கூட்டருக்கு மானசீகமாக நன்றி கூறினாள்.

# தொட்டித்தோட்டம்

மணி, தன் தந்தை வாங்கி வந்த பெரிய பூந்தொட்டிகளில் கீரை, தக்காளி, வெண்டை, கத்தரி விதைகளைத் தூவிக் கொண்டிருந்தான். அதைப்பார்த்த அவன் அம்மா மரகதம், ''என்னப்பா செய்கின்றாய்? பூச்செடி நடப்போகிறாயா? அதற்கு ஏன் இவ்வளவு பெரிய தொட்டிகளை வாங்கி வரச்சொன்னாய்?'' என்று கேட்டார்.

''காய்கறிகள் விலை அதிகமாகிவிட்டது என்று நீங்கள்தானே அப்பாவோடு பேசிக்கொண்டிருந்தீர்கள்! மழைக்காலத்தில் காய்கறிப் பயிர்கள் வீணாகி இருக்கும். அதனால், விளைச்சல் குறைவாக இருக்கலாம். ஒருவேளை அறுவடை செய்ய முடியாமல் இருக்கலாம். இவற்றால் காய்கறிகளின் விலைகள் கூடியிருக்கலாம்தானே அம்மா''



''அதெல்லாம் சரி தான். அதற்கும் நீ பண்ணிக்கொண்டிருக்கும் வேலைக்கும் என்ன சம்பந்தம்?''

''அந்தக்காலத்தில் காய்கறிகளை வீட்டுக்குப் பின்புறமாக பயிர் செய்வார்கள். இப்போது வீடுகளில் தேவையில்லாமல் அழகுக்குச் செடி வளர்க்கிறார்கள். காலச்சூழலுக்கு ஏற்றபடி, தொட்டிகளில் வளர்க்க முடிந்த காய்கறிகளைப் பயிரிடலாம் இல்லையா? வீட்டுக்குப் பின்புறத்தில் வாழை, தென்னங்கன்றுகளை நடப் போகிறேன். இப்படி எல்லோரும் செய்தால் காய்கறி விலை குறையும். குறைந்தபட்சம் மழைக்காலத்திலாவது உணவுத் தேவைகளை நாம் சமாளிக்கலாம் இல்லையா? அம்மா'' என்றான் மணி.

தனது மகனின் யோசனையைக் கேட்டு, அவனைக் கட்டி அணைத்து முத்தமிட்டார் மரகதம்.


## விஜய் சந்தா விபரம்

| கொழும்பில் வசிப்போர் (நேரடியாகப் பெறுவதற்கு) | | கொழும்பிற்கு வெளியே வசிப்போர் (தபாலில் பெறுவதற்கு) | |
|---|---|---|---|
| 6 மாதத்திற்கு | - ரூபா 390/= | 6 மாதத்திற்கு | - ரூபா 780/= |
| 1 வருடத்திற்கு | - ரூபா 780/= | 1 வருடத்திற்கு | - ரூபா 1560/= |

கீழ்காணும் கூப்பனை நிரப்புங்கள். (ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது.)

பெயர் - ..............................
..............................
முகவரி - ..............................
..............................
தொ.பேசி - ..............................
பத்திரிகையின் பெயர் - ..............................

விஜய் Subscription
For 6 Months/ 1 Year
(அவசியமற்றதை வெட்டிவிடவும்)
..............................
கையொப்பம்/திகதி

மேற் காணப்படும் விபரத்திற்கேற்ப பணத்தை தபாலகத்தில் காசுக்கட்டளையாகச் செலுத்தி குறித்த காசுக்கட்டளையை மாற்றக்கூடிய தபால் கந்தோர் - Slave Island Post Office என்று குறிப்பிடவும். குறித்த காசுக்கட்டளையையும் இங்கு நிரப்பப்பட்ட கூப்பனையும் ஒன்றாக இணைத்து பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி:

SUBSCRIPTION MANAGER,
Wijeya Newspapers Ltd.,
8, Hunupitiya Cross Road, Colombo-02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆயுබෝවන්
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் 'மிருகக்காட்சிசாலை' பற்றி ஒரு சிறு கட்டுரையைப் பார்ப்போம்

## සත්තු වත්ත

1. දෙහිවල සත්තු වත්ත පිහිටා තිබේ.
2. දිනක් මම අම්මා, තාත්තා සමඟ එහි ගියෙමි.
3. එහි ලස්සන කුරුල්ලෝ බොහෝ සිටියහ.
4. ගුහාවල සිංහයෝ, වලස්සු, කොටි වැනි භයානක සත්තු සිටියහ. තව ජිරාෆ්, සීබ්‍රා වැනි සතුන්ද සත්තු වත්තේ දැකිය හැක.
5. ගස් උඩ වඳුරෝ සිටියහ. ඔව්හු සෙල්ලම් දැක්වූවෝය.
6. තව භයානක සර්පයෝ බොහෝ සිටියහ.
7. මාලුන් සිටින මින් මැදුර ඉතා අලංකාරය.
8. සවස අලි නැටුම් බලා අපි සත්තු වත්තෙන් ආවෙමු.

## சத்து வத்த

1. தெஹிவள சத்து வத்த பிஹிடா திபே.
2. தினக் மம அம்மா, தாத்தா சமங்க எஹி கியெமி.
3. எஹி லஸ்ஸன குருல்லோ பொஹோ சிடியஹ.
4. குஹாவள சிங்ஹயோ, வலஸ்ஸு, கொட்டி வெனி பயானக சத்து சிடியஹ. தவ ஜிராஃப், சீப்ரா வெனி சதுன்த சத்து வத்தே தெகிய ஹெக.
5. கஸ் உட வந்துரோ சிடியஹ. ஒவ்ஹு செல்லம் தெக்வூவோய.
6. தவ பயானக சர்பயோ பொஹோ சிடியஹ.
7. மாலுன் சிடின மின் மெதுர இதா அலங்காரய.
8. சவச அளி நெடும் பலா அபி சத்து வத்தென் ஆவெமு.

## மிருகக்காட்சிசாலை

1. தெஹிவளையில் மிருகக்காட்சிசாலை அமைந்திருக்கின்றது.
2. ஒரு நாள் நான் அம்மா, அப்பாவுடன் அங்கே போனேன்.
3. அங்கே அழகான பறவைகள் இருந்தன.
4. குகைகளில் சிங்கம், கரடி, புலி போன்ற பயங்கர மிருகங்களும் ஒட்டகச்சிவிங்கி, வரிக்குதிரை போன்ற மிருகங்களையும் மிருகக்காட்சிசாலையில் காணலாம்.
5. மரங்களில் குரங்குகள் இருந்தன. அவை விளையாட்டுக்களைக் காண்பித்தன.
6. இன்னும் பயங்கரமான பாம்புவகைகளும் இருந்தன.
7. மீன்கள் இருக்கும் மீன் காட்சியகம் மிகவும் அலங்காரமாக இருந்தது.
8. மாலைநேரம் யானை நடனம் பார்த்துவிட்டு நாங்கள் மிருகக்காட்சிசாலையிலிருந்து வெளியேறினோம்.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

i. தெஹிவளையில் மிருகக்காட்சிசாலை அமைந்திருக்கின்றது.
..........................................................................

ii. மரங்களில் குரங்குகள் இருந்தன.
..........................................................................

iii. பயங்கரமான பாம்பு வகைகளும் இருந்தன.
..........................................................................



**இடைவெளிகளை நிரப்புக**

1. එහි .............................. කුරුල්ලෝ බොහෝ සිටියහ.
2. ගස් උඩ .............................. සිටියහ.
3. තව භයානක සර්පයෝ .............................. සිටියහ.
4. .............................. සිටින මින් මැදුර ඉතා අලංකාරය.




'Be' எனும் மூல வினைச்சொல்லை (Stem Verb) Will எனும் வினைச்சொல் சகிதம் கையாண்டு அமைக்கப்படுகின்ற எதிர்கால தனி வாக்கியங்களின் (Future Simple Tense) 'உடன்பாடு நிலை' (Affirmative) வாக்கியங்களை, வினாநிலை (Interrogative) வாக்கியங்களாக பின்வருமாறு மாற்றியமைக்கலாம்.

(அ) நீ நாளை பாடசாலையில் இருப்பாய்.
You will be in school tomorrow.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative)

(ஆ) நீ நாளை பாடசாலையில் இருப்பாயா?
Will you be in school tomorrow?
(வினா வாக்கியம்-Interrogative)

✱ நீ பாடசாலையில் இருப்பாய்.
You will be in school.

✱ நீ பாடசாலையில் இருப்பாயா?
Will you be in school?

✱ நீ இருப்பாய். (உடன்பாடு)
You will be. (Affirmative)

✱ நீ இருப்பாயா? (வினா)
Will you be? (Interrogative)

(இ) அவர்கள் நாளை கடையில் இருப்பார்கள்.
They will be in the shop tomorrow.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative)

(ஈ) அவர்கள் நாளை கடையில் இருப்பார்களா?
Will they be in the shop tomorrow?
(வினா வாக்கியம் -Interrogative)

✱ அவர்கள் கடையில் இருப்பார்கள்.
They will be in the shop.

✱ அவர்கள் கடையில் இருப்பார்களா?
Will they be in the shop?

✱ அவர்கள் இருப்பார்கள். (உடன்பாடு)
They will be. (Affirmative)

✱ அவர்கள் இருப்பார்களா? (வினா)
Will they be? (Interrogative)

(உ) விவசாயிகள் நாளை காலை வயலில் இருப்பார்கள்.
The farmers will be in the field tomorrow morning.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative)

(ஊ) விவசாயிகள் நாளை வயலில் இருப்பார்களா?
Will the farmers be in the field tomorrow?
(வினா வாக்கியம் - Interrogative)

✱ விவசாயிகள் வயலில் இருப்பார்கள்.
The farmers will be in the field.

✱ விவசாயிகள் வயலில் இருப்பார்களா?
Will the farmers be in the field?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்லாடனின் மறைவு...



'அல்கய்தா, அமைப்பின் தலைவரான ஒசாமா பின்லாடன் அமெரிக்கப் படையினரால் கொல்லப்பட்ட சம்பவம் கடந்த வாரம் உலக அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிகழ்வாக அமைந்தது.

2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதியன்று அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் மீது தற்கொலை விமானத்தாக்குதலை நடத்தி




அக்கட்டடங்களை தரைமட்டமாக்கியது ஒசாமா பின்லேடனின் அல்கய்தா அமைப்பு.

இந்த சம்பவத்தையடுத்து அமெரிக்கா பின்லேடனை தேடி அழிக்கும் படலத்தில் இறங்கியது. இதனால், பின்லேடனும் நாட்டுக்கு நாடு தனது இருப்பிடத்தை மாற்றிக்கொண்டிருந்தார். அதன்படி, அவர் பாகிஸ்தானில் அபோதாபாத் என்ற இடத்தில் தங்கியிருக்கையிலேயே குறித்த நாளில் வானிலிருந்தும்,




தரையிலிருந்தும் நடத்தப்பட்ட ஏக கால தாக்குதலில் பின்லாடன் கொல்லப்பட்டதாக கூறப்படுகின்றது.

சவுதி அரேபியாவில் 1957 ஆம் ஆண்டு மிகுந்த செல்வந்தக் குடும்பத்தில் பிறந்த ஒசாமா பின்லாடன் தமது பெற்றோருக்கு 17 ஆவது பிள்ளையாவார். ஆப்கானிஸ்தானில் ரஷ்யா தனது கொம்யூனிஸ ஆட்சியை நிறுவ முற்பட்டதை எதிர்க்கும் நோக்கில் 1988 ஆம் ஆண்டில் அல்கய்தா அமைப்பினை பின்லாடன் உருவாக்கினார். அன்று தொடக்கம் உலகளாவிய ரீதியில் அவரது உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## தெரிந்து கொள்வோம்

- நேபாளத்தின் தலைநகர் காத்மண்டு என்பது போல ஆப்கானிஸ்தானின் தலைநகரம் எது?
  காபூல்



- பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதியின் பெயர் என்ன?
  நிகொலஸ் சார்கோசி



- தமிழ் மொழித்தினம் எந்த தமிழ் அறிஞரின் நினைவு தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது?
  சுவாமி விபுலானந்தர்



- கோதுமையும் சோயாவும் கலந்த குழந்தைகளுக்கான உணவுப்பொருள் எது?
  திரிபோசா




- நைல் நதியின் நன்கொடை என அழைக்கப்படும் நாடு எது?
  எகிப்து



- சிகிரியாவை நிர்மானித்த காசியப்ப மன்னனின் தந்தை யார்?
  தாதுசேனன்



- இடிதாங்கியைக் கண்டுபிடித்தவர் யார்?
  பெஞ்சமின் பிரங்ளின்
- 2 ஆம் உலகப் போரின் பின்னர் உலகில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பே ஐக்கிய நாடுகள் சபையாகும். அவ்வாறே, முதலாம் உலகப் போரின் பின்னர் சபையொன்று உருவாக்கப்பட்டிருந்தது. அது எவ்வாறு அழைக்கப்பட்டது?
  லீக் ஒப் நேசன் - சர்வதேச சங்கம்
- இலங்கையில் தபால் அட்டை (Post card) ஒன்றின் விலை என்ன?
  5 ரூபா



- 'ஹரிபொட்டர் எனும் திரைப்படத்தின் கதாநாயகனாக 10 வயது முதல் நடித்து வரும் சிறுவன் இன்று 21 வயதைத் தாண்டியுள்ளான் அவனின் பெயர் என்ன?
  டேனியல் ரெட்கிளிப்
- விண்வெளிக்கு முதலில் சென்ற உல்லாசப் பயணி யார்?
  டெனிஸ் டிட்டோ (2001 இல்)



- சிம்போனி இசையை அறிமுகப்படுத்தியவர் யார்?
  இளையராஜா



- கிரிக்கெட் விளையாட்டில் 'போல் அவுட்' எனும் முறை ஏன், எவ்வாறு பின்பற்றப்படுகின்றது?
  இருபதிற்கு-20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் இரு அணிகளும் சம அளவு ஓட்டங்களைப் பெற்றால் இம்முறை பின்பற்றப்படுகிறது. இரு அணிகளிலும் உள்ள பந்து வீச்சாளர்கள் துடுப்பாட்ட வீரர் அற்ற விக்கெட்டிற்கு பந்தை வீச வேண்டும். கூடுதலாக விக்கெட்டை வீழ்த்திய அணி வெற்றி பெற்றதாகக் கருதப்படும்.

**தொகுப்பு:- உடுவை பரந்தாமன்**

## மாலைதீவு ஜனாதிபதியை பதவி விலகுமாறு அழுத்தம்



**மாலைதீவுகளின் ஜனாதிபதி மொஹமத் நஷீத்தை பதவி விலகுமாறு கோரி அந்நாட்டின் தலைநகர் மாலேயில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் பல நடைபெற்றுள்ளன. வறுமை நிலை அதிகரித்துச் செல்கின்றமை, வேலைவாய்ப்பின்மை, வேலை அதிகரிப்பு போன்ற பல்வேறு காரணங்களை முன்னிறுத்தியே இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன.**

**எதிர்க்கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஆர்ப்பாட்டங்களில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர். இந்த ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்கு பொலிஸார் கண்ணிர்ப் புகைக் குண்டுப் பிரயோகங்களையும் மேற்கொண்டிருந்தனர். மாலைதீவுகளில் 330,000 சன்னி முஸ்லிம் இனத்தவர்கள் வாழ்ந்து வருவதுடன், இவர்களில் கணிசமான எண்ணிக்கையினர் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்ந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.**




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

## பின்லாடன் கொல்லப்பட்டதை ஏற்க மாட்டோம் — தலிபான் அமைப்பு

அல்கய்தா அமைப்பின் தலைவர் பின்லாடன் கொல்லப்பட்டதற்கான போதிய ஆதாரங்கள் இல்லாமையால் அந்த தகவலை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஆப்கானிஸ்தானில் இயங்கும் தலிபான் அமைப்பு ஈமெயில் தகவலொன்றில் தெரிவித்துள்ளது.

பின்லாடன் கொல்லப்பட்டதற்கான போதிய ஆதாரங்களை முன்வைப்பதற்கு அமெரிக்கா தவறியுள்ளது. எனினும், பின்லாடன் கொல்லப்பட்ட செய்தியை ஏற்றுக்கொள்வதற்கோ, மறுப்பதற்கோ அவருக்கு நெருக்கமான எவரும் முன்வராதிருப்பது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தலிபான் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

## நியூஸிலாந்தில் சூறாவளி

நியூஸிலாந்தின் ஒக்லன்ட் நகரை ஊடறுத்துச் சென்ற 'டொனெடோ' சூறாவளியின் காரணமாக வீடுகள், கட்டடங்கள் பல சேதங்களுக்கு உள்ளாகின. முன்னர் வந்த செய்திகளின் படி, ஒருவர் இறந்துள்ளதுடன், 20 பேர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த சூறாவளியினால் மோட்டார் வாகனங்கள் கூடதூக்கி எறியப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



### அற்லஸ் கேள்வி - 307

**கேள்வி:** அமெரிக்காவில் இரட்டைக் கோபுரம் தாக்குதலுக்குள்ளானது எப்போது?

**சரியான விடை................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே உலகைக் காண்போம், கேள்வி - 307, விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 305 இன் சரியான விடை: டெமோக்ரடிக் லிபரல்**

**பரிசு பெறுவோர்**

அஸ்மா பஹ்மி
17/C, விகாரை வீதி., களுபோவில, தெஹிவளை.

சி.நிர்மலா
நவாலி வீதி, தட்டுடைச்சந்தி., மானிப்பாய்.

ஆர்.ரிஷொப் ஹர்ஷன்,
43/2, ரோஸரி வீதி., குடாபாடுவ, நீர்கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல்.போன்று இலங்கையிலும் பிரிமியர் லீக் போட்டிகள்

## வெளிநாட்டு வீரர்களும் இடம்பெறுவர்

இந்தியாவில் நடைபெறும் ஐ.பி.எல். போட்டிகளைப் போன்ற போட்டிகளை இலங்கையிலும் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் போட்டிகள் ஸ்ரீலங்கா T/20 பிரிமியர் லீக் (SLPL) என்று அழைக்கப்படும். அதன்படி, இந்தப் போட்டிகளில் ஏழு அணிகள் விளையாடும். குறிப்பிடத்தக்க ஆறு மாகாணங்களின் பெயர்கள் இந்த அணிகளுக்கு சூட்டப்பட்டுள்ளன. அதற்கமைய, ருஹுனு, வயம்ப, கந்துரட்ட (மலையகம்), பஸ்னாஹிர (மேல்), நெகனஹிர (கிழக்கு), உத்துர (வடக்கு), ஊவா என இவற்றிற்குப் பெயரிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு அணியிலும் 5 வெளிநாட்ட வர்கள்தெரிவு செய்யப்படுவர். ஆனால், இவர்களில்




போட்டிக் களம் புகுவதற்கு 4 பேருக்கே அனுமதி வழங்கப்படும். அணியின் ஏனையவர்கள் இலங்கையைச் சேர்ந்த உள்ளூர் வீரர்களாவர். இவர்களில் புதிய உள்ளூர் வீரர்களும் உள்ளடங்குவர். எனவே, ஒட்டுமொத்தமாக ஏழு அணிகளிலும் இடம்பெறவுள்ள மொத்த இலங்கை வீரர்கள் 70 ஆகும்.

இதில் கலந்துகொள்ளவுள்ள விளையாட்டு வீரர்களில் பாகிஸ்தான் அணியின் சகல வீரர்களும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேற்படி போட்டிகள் ஜூலை மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகி 18 நாட்கள் நடைபெறும். இதில் 24 போட்டிகள் அடங்குவதுடன், 2 அரையிறுதிப் போட்டியும் இறுதிப் போட்டியும் நடைபெறும். இலங்கையில் நடைபெறவுள்ள இந்த T/20 போட்டிகளில் இந்தியாவிலிருந்து இர்பான் பதான், யூசுப் பதான் ஆகியோரும், மே.இ.தீவுகளிலிருந்து கிரிஸ்கேல், டயன் பிரேவோ,




டரன் பிரேவோ ஆகியோரும் மற்றும் 'ஹேர்ஷல் கிப்ஸ், டேவிட் வோனர், ஷோன் ஸ்டட் ஆகியோரும் இடம்பெறுவது உறுதியாகியுள்ளது.

இலங்கை வீரர்களில் உடல் உபாதையில் உள்ள முரளிதரன் இடம்பெறுவாரா இல்லையா என்பது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை. குறித்த இலங்கை T/20 பிரிமியர் லீக் போட்டிகளில் ஏழு அணிகளுக்கும் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ள வீரர்கள் வருமாறு;

1. ருஹுனு - சனத் ஜயசூரிய
2. வயம்ப - மஹேல ஜயவர்தன
3. கந்துரட்ட - சங்கக்கார
4. பஸ்னாஹிர (மேல்) - டில்ஷான்
5. ஊவா - சமிந்தவாஸ்
6. நெகனஹிர (கிழக்கு) - அஃப்ரிடி
7. உத்துர (வடக்கு) - வெட்டோரி

## ஹஷான் திலகரட்னவின் குற்றச்சாட்டு



1992 ஆம் ஆண்டில் இருந்து இலங்கை கிரிக்கெட்டில் கிரிக்கெட் சூதாட்டம் இருந்து வருவதாக இலங்கை அணியின் முன்னாள் வீரர் ஹஷான் திலகரட்ன தெரிவித்துள்ளார். இக்கருத்து உள்ளூரிலும் வெளிநாட்டிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை அணியில் முன்னர் குறிப்பிட்ட சில காலத்திற்கு அணியின் தலைவராக இருந்த ஹஷான் திலகரட்ன தெரிவித்துள்ள இத்தகைய கருத்தையிட்டு இலங்கை அணியின் வீரர்கள் பலர் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர்.

தன்னிடம் போதிய ஆதாரங்கள் இருப்பதாலேயே இந்தக் குற்றச்சாட்டை சுமத்துவதாகவும், உரிய சந்தர்ப்பத்தில் உரிய இடத்தில் இவற்றை முன்வைப்பதாகவும் ஹஷான் திலகரட்ன தெரிவித்துள்ளதுடன், இரண்டு முக்கிய நபர்கள் இதற்கு சாட்சியமளிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள முரளிதரன் "இவ்வாறான குற்றச்சாட்டை சுமத்துகின்ற ஹஷான், உரிய ஆதாரங்களுடன் அவற்றை வெளியிடாமல் தாமதித்துக்கொண்டிருப்பது ஏன்?" என்று வினா எழுப்பியுள்ளார்.

ஹஷான் திலகரட்ன் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுத் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் (சி.ஐ.டி) பிரிவினரும் விசாரணைகளை நடத்தியிருப்பதாகத் தெரிய வருகின்றது.

## தேர்வுக் குழுவினர் வஞ்சனை செய்தனராம் சந்தர்போல் கவலை



பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் திட்டமிடப்பட்டே தனக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்று மேற்கிந்திய தீவுகள் அணியின் வீரர் சிவநாராயணன் சந்தர்போல் தெரிவித்துள்ளார்.

இம்முறை இடம்பெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளின் பின்னர் மே.இ. தீவுகள் அணியிலிருந்து ஓய்வுபெறுமாறு தனக்கு அணியின் தேர்வுக் குழுவினர் அழுத்தம் கொடுத்ததாகவும், ஆனால், அதற்குத் தான் மறுப்புத் தெரிவித்தமைக்குப் பதிலடியாகவே பாகிஸ்தான் அணியுடனான போட்டியில் தனக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

கடந்த ஒரு வருட காலமாக அணியின் சார்பாக சிறப்பாக செயற்படாத காரணத்தினாலேயே வாய்ப்பு அவருக்கு வழங்கப்படவில்லை என்று தேர்வுக் குழுவினர் தம் பக்க நியாயத்தைக் கூறுகின்றனர்.ஆனால், இதற்குப் பதிலளித்துள்ள சந்தர்போல் இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் மே.இ.தீவுகள் சார்பாகப் போட்டியிட்டவர்களில் அதிக ஓட்டங்களைப் பெற்றவர்களின் வரிசையில் தான் மூன்றாவது இடத்தில் இருக்கும்போது, தன்னை எவ்வாறு நிராகரிக்க முடியும் என்று தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கை அணியில் இவர்களும்...

இங்கிலாந்தில்-போட்டிகளில் ஈடுபடவுள்ள இலங்கை அணியில் மஹ்ரூஃப், கௌஷால் சில்வா ஆகியோர் இடம்பெறுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் நடைபெறுகின்ற ஐ.பி.எல்.போட்டிகளில் இலங்கை அணியின் சில வீரர்கள்




இடம்பெற்றுள்ளமையினால் இங்கிலாந்துடனான ஆரம்பப் போட்டிகளில் சில இலங்கை வீரர்கள் இடம்பெறமாட்டார்கள் என்பதாலேயே அவர்களுக்குப் பதிலாக மஹ்ரூஃப், கௌஷால் சில்வா ஆகியோர் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்தன ஆகிய இலங்கை அணியின் வீரர்கள் இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள ஆரம்ப பயிற்சிப் போட்டிகளில் கலந்துகொள்வதற்கான வாய்ப்பு இல்லாத காரணத்தால் மாற்று வீரர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

## பெட்மின்டன் சம்மேளனம் கிளப்பியுள்ள சர்ச்சை

சர்வதேச பெட்மின்டன் கழகம் அண்மையில் மேற்கொண்ட தீர்மானமொன்று புதிய சர்ச்சையொன்றைக் கிளப்பியுள்ளது. அதாவது, பெட்மின்டன் மகளிர் பிரிவில் கலந்துகொள்ளும் வீராங்கனைகள் கட்டாயமாக குட்டைப் பாவடை அணிந்தே விளையாட வேண்டும் என்பதே அந்த தீர்மானமாகும். இந்தத் தீர்மானத்தையிட்டு பாகிஸ்தான் பெட்மின்டன் சம்மேளனம் தனது எதிர்ப்பை, அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

அதாவது. இந்த சட்டமானது இஸ்லாமிய சமய நெறிமுறைகளுக்கு மாறாக இருப்பதனால் இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றும் போட்டியாளர்கள் இதனைக் கடைப்பிடிப்பதில் இணக்கம் காட்டமாட்டார்கள் என்று தெரிவித்துள்ள பாகிஸ்தான், தமது நாட்டு வீராங்கனைகள் குட்டைப் பாவாடை அணிந்து விளையாடமாட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளது. இருப்பினும் ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் பெட்மின்டன் வீராங்கனைகள் குட்டைப் பாவாடை அணிந்தே விளையாட வேண்டும் என்று சர்வதேச பெட்மின்டன் சம்மேளனம் தெரிவித்துள்ளது.




ஆனால், பாகிஸ்தான் பெட்மின்டன் சம்மேளனம் இந்த உத்தரவைக் கடைப்பிடிக்க மறுத்தால் குறித்த சம்மேளனம் தடை செய்யப்படக்கூடிய சாத்தியங்கள் உள்ளன. அவ்வாறு நடைபெற்றால் இது குறித்து ஆசிய பெட்மின்டன் சம்மேளனத்திடம் முறைப்பாடு செய்வோம் என்றும் பாகிஸ்தான் பெட்மின்டன் சம்மேளனம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# 2020 ஆம் ஆண்டளவில் சீன விண்வெளி நிலையம் நிறுவப்படும்

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டளவில் 60 டொன் எடையில் விண்வெளியில் மிகப் பெரிய நகரும் விண்வெளி நிலைய மொன்றை நிறுவ சீனா தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மாதிரி விண்வெளி நிலையத்திற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள நிலையில், புதிய விண்வெளி நிலையத்தை அமைப்பதற்கான முதற்கட்டப் பணிகளை சீன விண்வெளி ஆராய்ச்சித் துறை ஆரம்பித்துள்ளது.

விண்வெளியில் நிறுவப்படவுள்ள மேற்படி விண்வெளி நிலையத்திற்கு தற்போதளவில் 'டியன்கோங்-1' என்று பெயரிடப்பட்டிருக்கின்ற போதும் அதற்கு ஒரு பெயரை பரிந்துரைக்கும்படி வல்லுனர்கள் மற்றும் பொதுமக்களிடம் சீன விண்வெளி ஆராய்ச்சித் துறை கேட்டுக்கொண்டுள்ளது. தற்போதளவில், மேற்படி விண்வெளி ஆய்வு கூடத்தை நிறுவுவதற்கான பணிகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் முதல் முயற்சியாக பொருட்களை சுமந்து செல்லும் சரக்கு விண்கலம் தயார் நிலையில் உள்ளது. இந்த நகரும் விண்வெளி



நிலையத்தை நிறுவுவதற்குத் தேவையான பொருட்களை இந்த சரக்கு விண்கலம் சுமந்து செல்லும். 18.1 மீற்றர் நீளமும் 4.2 மீற்றர் விட்டமும் 20 முதல் 22 டொன் எடையில் முதலாவது தொகுதி அமைக்கப்பட்டு, செயற்படத் தொடங்கியதை அடுத்து, படிப்படியாக அது விரிவாக்கம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விண்வெளி நிலையம் 2 ஆய்வு கூடங்கள் மற்றும் மூன்று பேரளவில் தங்கக்கூடிய தொகுதி ஒன்றையும் கொண்டிருக்கும்.

# 'எண்டீவர்' விண்கலத்தின் இறுதிப் பயணம் நியமித்த தினத்தில் இடம்பெறவில்லை


கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதி கென்னடி விண்வெளி நிலையத்தில் குழுமியிருந்த பார்வையாளர்கள்

அமெரிக்க விண்வெளி மையத்தின் (NASA) எண்டீவர் விண்கலமானது, கடந்த ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி விண்வெளிக்கான தனது இறுதிப் பயணத்தை கென்னடி விண்வெளி மத்தியநிலையத்திலிருந்து ஆரம்பிக்க இருந்தது. எண்டீவரின் இறுதிப் பயணத்தைப் பார்ப்பதற்காக ஏராளமான பார்வையாளர்கள் கென்னடி விண்வெளி மத்தியநிலையத்தில் குழுமியிருந்தனர். அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் அவரது பாரியாரும் இந்நிகழ்விற்காக அழைக்கப்பட்டிருந்தனர்.

## திடீர் கோளாறும் ஒத்திவைப்பும்

எண்டீவர் விண்கலம் புறப்படுவதற்கு சற்று நேரத்திற்கு முன்னர் அதன் நீர் மின்வலு பிறப்பாக்கியின் மின்னேற்றிகளில் கோளாறு ஏற்பட்டிருக்கின்றமை கண்டறியப்பட்டதை அடுத்து, குறித்த பயணத்தை ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. கோளாறு ஏற்பட்டிருக்கும் பகுதியில் புதிய ஆளியொன்றைப் பொருத்தி, சகல பகுதிகளையும் மீள் பரிசோதனை செய்து பார்க்க வேண்டியிருப்பதாலேயே எண்டீவரின் இறுதிப் பயணம் நியமித்த தினத்திலிருந்து ஒத்தி வைக்கப்பட்டதாக எண்டீவர் விண்கலத்தின் நிகழ்ச்சித் திட்டக் குழு மேற்பார்வையாளரான மைக் மோசஸ் தெரிவித்திருந்தார்.

## இறுதிப் பயணம்

எண்டீவரின் இறுதிப் பயணத்தில் ஆறு விண்வெளி வீரர்கள் கலந்துகொள்கின்றனர். இந்த விண்வெளிப் பயணத்துடன் எண்டீவர்


அமெரிக்க ஜனாதிபதியும் அவரது பாரியாரும் STS-134 குழுவினருடன்


STS-134 குழுவினர்

விண்கலம் தனது விண்வெளிப் பயணத்திலிருந்து முற்றாக ஓய்வு பெறுகின்றது. அதன்படி, இந்த இறுதிப் பயணமானது எண்டீவரின் 25 ஆவது விண்வெளிப் பயணமாகக் கொள்ளப்படுகின்றது.


எண்டீவர் ஈடுபடுத்தப்பட்ட விண்வெளித் திட்டங்கள்

இறுதிப் பயணத்தின்போது, சுமார் 2 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியுடைய கண்காணிப்புத் தொகுதியொன்றை சர்வதேச விண்வெளி மையத்திற்கு எண்டீவர் கொண்டுசெல்கின்றது.

## விண்வெளிப் பயணங்களிலிருந்து ஓய்வுபெறும் விண்ணோடங்கள்




நாஸாவின் 30 வருடகால விண்வெளிப் பயணங்களில் பங்கேற்று, ஓய்வு பெறும் விண்வெளி ஓடங்களில் எண்டீவர் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. நாஸாவின் விண்கலங்களில் முதலில் ஓய்வு பெற்ற விண்கலமாக டிஸ்கவரி திகழ்கின்றது. அது கடந்த மார்ச் மாதம் தனது இறுதிப் பயணத்தை நிறைவு செய்து பூமியை வந்தடைந்தது.

அந்தவகையில், இரண்டாவதாக எண்டீவர் விண்கலம் ஓய்வு பெறவுள்ளது. அதனை அடுத்து, அட்லாண்டிஸ் விண்கலம் தனது இறுதிப் பயணத்தை எதிர்வரும் ஜூன் மாதமளவில் தொடரும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. நாஸாவின் மூன்று விண்வெளி ஓடங்களில் இளமையான விண்கலமாகவே எண்டீவர் திகழ்கின்றது. 1986 ஆம் ஆண்டு செலஞ்சர் விண்கலம் விபத்துக்குள்ளானதை அடுத்து எண்டீவர் விண்கலம் உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## எண்டீவர் பற்றிய முக்கிய குறிப்புக்கள் சில...



**தாயகம்:** ஐக்கிய அமெரிக்கா

**முதல் பயணம்:** மே 7, 1992- மே 16,1992 (STS-49 குழுவினர்)

**இறுதிப் பயணம்:** நியமிக்கப்பட்ட திகதி ஏப்ரல் 29,2011. (இப்பயணம் திடீர் கோளாறு காரணமாக ஒத்திவைக்கப்பட்டது)

இறுதிப் பயணத்தில் கலந்துகொள்ளும் குழு STS-134 என பெயரிடப்பட்டுள்ளது. இக்குழுவில் மொத்தம் ஆறு விண்வெளி வீரர்கள் இடம்பெறுகின்றனர்.

**மேற்கொண்ட விண்வெளித் திட்டங்களின் எண்ணிக்கை:** 25

**தாங்கிச் சென்ற விண்வெளி வீரர்களின் எண்ணிக்கை:** 148

**இதுவரை விண்வெளியில் கழித்த மொத்த கால அளவு:** 280 நாட்கள், 9 மணித்தியாலங்கள், 39 நிமிடங்கள், 44 செக்கன்கள்.

**வலம் வந்த தடவைகளின் எண்ணிக்கை:** 4,429

**இதுவரை பயணித்த மொத்த தூரம்:** 166, 033,247 கி.மீ.

-என்ஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'இராமாயணம்' சித்திரத் தொடரினை வரலாறு மற்றும் தமிழ் பாடங்களைப் படிக்கும் மாணவர்கள் ஆர்வத்துடன் வாசிக்கிறார்கள். நீ தொடர்ச்சியாகப் பிரசுரித்து வரும் 'வாரம் ஒரு நாடு' எனும் பகுதி மிகவும் பயனுள்ளதாகும். 'இலங்கையில் போர்த்துக்கேய ஆதிக்கம்' எனும் ஆக்கம் வரலாறு பாட ஒப்படைக்குப் பெரிதும் உதவுகின்றது. பல்வேறு பயன்களைத் தரும் ஆக்கங்களைத் தாங்கிவரும் உன் ஆயுள் நீடிக்க என் நல்வாழ்த்துக்கள்.

**ஸமீல் மொஹமட், நாங்கல்ல மு.ம.வித்., நாங்கல்ல.**

'நேரம் காட்டும் கருவியின் கதை', 'மேதினம்', 'இலங்கையில் போர்த்துக்கேயரின் ஆதிக்கம்', 'வாரம் ஒரு நாடு', 'இராமாயணம்' போன்றவற்றை விரும்பி வாசித்தேன். அவற்றினூடாக, ஏராளமான விடயங்களை அறிந்துகொண்டேன்.

**எஸ்.பிறேம்சஜன், புனித மிக்கேல் கல்., மட்டக்களப்பு.**

'வாசிப்பு- படைப்பாக்கத் திறனை உருவாக்குவது எப்படி?' என்ற ஆக்கம் வரவேற்கத்தக்கது. அதில் குறிப்பிடப்பட்டிருந்த அனைத்து தகவல்களும் நூறுவீதம் உண்மை. இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களின் எல்லையற்ற பயன்பாடு அனைவரையும் ஆதிக்கம் செலுத்தும் ஒருகாலம்தான் இது. இதனால், சமூக சீர்கேடுகளும் ஏராளம். இதனை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். அதற்கான சிறந்த வழிகாட்டலாக இந்தக் கட்டுரை அமைந்துள்ளது.

**எம்.சலாஹுதீன், மடவளை பஸார், மடவளை.**

உன்னில் அடங்கியிருந்த விடயங்கள் அனைத்தும் பாராட்டுக்குரியவை. 'மே தினம் உருவான விதம்', 'இலங்கையில் போர்த்துக்கேயரின் 'ஆதிக்கம்' போன்ற ஆக்கங்களுடன் 'பெரியோர் துணை' எனும் சிறுகதை உட்பட, அனைத்தும் சுப்பர். உன் பணி தொடர என் வாழ்த்துக்கள்.

**முஸ்லிஹ் ரிஸ்வி, ஜஸ்டிஸ் அக்பர் மாவ., கொழும்பு-02.**

# விஜய் வாசகர் மடல்



உன்னில் பிரசுரமாகும் அனைத்து விடயங்களும் எமது அறிவிற்கு உரமூட்டிக்கொண்டிருக்கின்றன. 'மே தின சிறப்புக் கட்டுரை', 'இலங்கையில் போர்த்துக்கேய ஆதிக்கம்', 'சிறுகதைகள்', 'வாரம் ஒரு நாடு', 'கற்றலுக்கான ஆலோசனைகள் உட்பட, அனைத்தும் மிகவும் பிரயோசனமானவை.

**ஸாஜிதா சப்வான், அல்-ஹம்றா ம.வித்., தர்காநகர்.**

'பயன்படும் பொருட்களாக வீடு வந்து சேரும் கழிவுகள்', 'கற்றலுக்கான ஆலோசனைகள்', 'மே தினம்', 'தட்பவெப்ப மாற்றங்கள்', 'மார்ட்டின் லூதரின் புரட்சி', 'கணினித் தகவல்கள்', 'இராமாயணம்' என அனைத்தும் மாணவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் மேலதிக அறிவை ஊட்டக்கூடியவையாக இருந்தன.

**வி.சபாரத்தினம், கல்வியன்காடு, யாழ்ப்பாணம்.**

பள்ளி செல்லும் மாணவர் தொடக்கம், பல்கலைக்கழகப் பட்டதாரிகள் வரை அனைவர் கைகளிலும் தவழ்ந்து திரியும் அறிவுப் பொக்கிஷமே! உன்னில் பிரசுரமாகி வரும் 'கற்றலுக்கான ஆலோசனைகள்', 'இராமாயணம்', 'விளையாட்டுத் தகவல்கள்', 'சிறுகதைகள்', 'தெரிந்துகொள்வோம்', 'வாரம் ஒரு நாடு' போன்ற தொடர் அம்சங்களை ஒவ்வொரு வாரமும் தவறாமல் வாசித்து வருகின்றேன். தவிர; 'மே தினம்', 'வாசிப்பு - படைப்புத் திறனை உருவாக்குவது எப்படி?', 'மீள்பாவனைக்குட்படும் கழிவுகள்' போன்ற ஆக்கங்களும் பிரமாதம்.

**எஃப்.ஹகீமா, கஹடோவிட்ட, வெயங்கொட.**

இந்த இதழில் (11.05.2011) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 18.05.2011.

அனுப்ப வேண்டிய முகவரி: வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.

## 1 வழி காட்டுங்கள்






## 2 பொருத்தமான எழுத்தை தெரிவுசெய்து இடைவெளியை நிரப்புக

| | | |
|---|---|---|
| ★ | ___TAR | B R C / S M K |
| (ஆந்தை) | ___WL | P O H / M L T |
| (வீடு) | ___OUSE | V H F / B M L |
| (கொடி) | ___LAG | G W P / A F Y |

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 309 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
ஜெ.கருஷ்ணா, பிரதான வீதி, பாண்டிருப்பு - 01

**போட்டி: 02**
எஃப்.சஃபா, ஜும்மா மஸ்ஜித் வீதி, மாளிகாவத்தை.

**போட்டி: 03**
என்.ஹம்தா, அலுத்வீதிய,வெலிகம.

**போட்டி: 04**
க.அபிலாஷ், காளி கோவில் வீதி, ஏறாவூர் - 04

**போட்டி: 05**
நி.ரூகேஷ், வேல்முருகு வீதி, சின்ன ஊறணி.

**பாராட்டுப் பெறுவோர்:**

- ச.ரதிதேவி, டிக்கோயா.
- க.நிறோஜினி, கொடிகாமம்.
- எம்.ரஸ்லான், மாடட்டுகம.
- எஸ்.தனுஷன், நீர்கொழும்பு.
- கே.மோகனரூபன், வட்டுக்கோட்டை.
- என்.பஸ்ஹர், கல்லொறுவ.
- ஏ.அஷ்பா, அரநாயக்க.
- ஏ.பேரிஜன், கோட்டைக்கல்லாறு - 01
- எம்.சுஹைப், எதுன்கஹகொடுவ.
- கே.கவிதர்ஷன், இறக்குவானை.

## 4 வாக்கியங்களிலுள்ள பிழைகளை இனங்கண்டு, திருத்தி எழுதுக

1. நான் நண்பர்களுடன் சேர்ந்து விளையாடினோம்.
2. கமல் நேற்றிரவு தேத்தண்ணி குடிப்பான்.
3. சேவல்கள் இன்று அதிகாலை கொக்கரித்தது.
4. குளத்தில் தாமரைப்பூக்கள் பூத்திருந்தது.

## 3 சரியான எண்ணிக்கையில் வட்டமிடுக




## 5 குழம்பியுள்ள வாக்கியங்களை ஒழுங்கமைத்து, குட்டிக்கதையைப் பெறுக

1. அந்தக் கைதி வியப்படைந்தவாறு, ''நீங்களோ இன்னும் சில தினங்களில் மரணதண்டனையைப் பெறப்போகிறீர்கள்... அப்படி இருக்கும்போது, இதைக் கற்றுக்கொள்வதால் என்ன பயன்?'' என்று கேட்டார்.
2. தத்துவஞானி சோக்ரடீஸ் சிறையில் அடைக்கப்பட்டு மரணதண்டனையை எதிர்நோக்கிக்கொண்டிருந்த காலம் அது.
3. அந்த இசையை வெகுவாக ரசித்த சோக்ரடீஸ், அந்தக் கைதியிடம் சென்று, ''இந்த வாத்தியக்கருவியை இசைப்பது எப்படி என்று எனக்கும் சொல்லிக்கொடுங்கள்'' என்று கேட்டார்.
4. அதற்கு சோக்ரடீஸ், ''புதிதாக ஒன்றைக் கற்றுக்கொண்டேன் என்ற திருப்தியுடன் சாகலாம் அல்லவா? அதனால்தான்'' என்றார். இதைக் கேட்ட கைதி வியப்பின் உச்சிக்கே சென்றார்.
5. சிறையில் சோக்ரடீஸின் பக்கத்து அறையில் இருந்த கைதி ஒருவர் ஒரு நாள் நரம்பு இசைக்கருவி ஒன்றை வாசித்துக்கொண்டிருந்தார்.

## அறிவுக்கு விருந்து 309 விடைகள்

**போட்டி: 01**




**போட்டி: 03**



**போட்டி: 04**

1. கணவன் - மனைவி
2. குறவன் - குறத்தி
3. மைத்துனி - மைத்துனன்
4. பிக்கு - பிக்குணி
5. அழகி - அழகன்
6. தமக்கை - தமையன்

**போட்டி: 05**

1. மஞ்சரி
2. வெள்ளிவிழா
3. திங்கட்கிழமை
4. அதிபதி
5. பனித்துளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூண்டுத்தாவரங்களில் பேரினம் 'வாழை'

உலகிலேயே பெரிய பூண்டுத்தாவர இனம் வாழை இனமாகும். காய்த்துக் குலுங்கும் வாழைமரங்கள் உண்மையில் மரங்கள் அல்ல. அது ஒரு தாவர இனம். அதன்படி, உலகின் பெரிய பூண்டுத் தாவர இனம் வாழை என்பது குறிப்பிடத்தக்கது.

ஏனெனில், வாழைக்கு ஏனைய மரங்களைப் போன்று கடினமான தண்டுப் பகுதியோ, கிளைகளோ காணப்படுவதில்லை. தாவரங்களைப்போன்று பூத்துக் காய்த்தபின் அவை இறந்து விடுகின்றன. ஆனால், இந்த வாழையினம் நமக்கு மரமாகவே அறிமுகமாகியுள்ளது.

தாவரவியல் வகைப்பாட்டின்படி, வாழை பூண்டுத் தாவரங்களில் பேரினமாகும். தென்கிழக்கு ஆசியாவில் தோற்றம் பெற்ற வாழை பபுவா நியூகினியாவில் அதிகளவில் விளைவிக்கப்பட்டது. வாழை ஒரு வெப்ப வலயப் பயிராக இருப்பினும் அது அதிகளவான நாடுகளில் பயிரிடப்படுவதும் குறிப்பிடத்தக்கது. அதேவேளை, வாழைகளை அதிகளவில் பயிரிடுவதில் இந்தியா முதலிடம் வகிக்கின்றது.

வாழைப்பழங்களைப் பெறும் முக்கிய நோக்குடனேயே வாழைமரங்கள் பயிரிடப்பட்டாலும் வாழைமரத்தின் ஏனைய பாகங்களான பூ, இலை, காய், பழம், தண்டு, நார்ப்பகுதி என்பன எமக்கு அதிகளவில் பயன்படுகின்றது. வாழைக்காய், வாழைப்பூ, வாழைத்தண்டு ஆகியவை உணவுக்கு மட்டுமன்றி சித்த மருத்துவத்திற்கும் பெரிதும் பயன்படுகின்றது. கைத்தொழில் துறையில் வாழைமரக் கழிவுகள் காகிதமாக மாற்றப்படுவதுடன், வாழை இழைகளைக்கொண்டு பட்டுப்போன்ற மென்மையான துணிகள் நெய்யப்படுகின்றன. ஜப்பானில் பாரம்பரிய உடையான 'கிமோனோ' ஆடைகளை உருவாக்கவும், நேபாளத்தில் கம்பளம் தயாரிக்கவும் இதன் இழைகள் பயன்படுகின்றன.

ஒரு வித்திலை த்ாவர இனமான வாழையின் வேர்த்தொகுதி மண்ணை ஊடுருவி ஆழமாகச் செல்லாமல் பரவியே செல்கின்றது. இரு வித்திலை தாவர வகைக்குரிய ஆணிவேர் தொகுதி இல்லாதிருப்பதால் பலமான காற்றுக்கு சாய்ந்துவிடும் தன்மையை இவை கொண்டிருக்கின்றன.



பெரும்பாலான தாவர இனங்களில் தண்டுப்பகுதி மண்ணுக்கு வெளியே சூரிய வெளிச்சத்தை நோக்கியே வளரும். ஆனால், வாழையில் அது கிழங்கு வடிவில் மண்ணுக்கு அடியிலேயே வளர்கின்றது. வெளியில் செங்குத்தாக வளரும் தண்டு போன்ற பகுதி இலைக்காம்புகளின் அடிப் பகுதிகள் ஒன்றன்மேல் ஒன்று பற்றி நிற்பதால் உருவாகிய பகுதியாகும்.

இது போலித்தண்டு எனப்படுகின்றது. இதன் இடைநடுவில் சற்று உறுதியான நாரால் ஆனது போன்று தோன்றும் தண்டுப் பகுதி 'மலர்க்காம்பு' எனப்படுகின்றது.

இலைக்காம்புகள் மண்ணுள் இருக்கும் கிழங்கிலிருந்தே தோன்றி வளரும். அதில் அடுக்காக நீளமான இலைகள் தோன்றும். அத்துடன், வாழையின் மலர்கள் ஒரு பூங்கொத்து போன்றே உருவாகின்றன. இருபால் உறுப்புகளைக் கொண்ட பூக்களில் முதலில் தண்டின் அடியில் ஆண் பூக்களும் நுனியில் பெண் பூக்களும் காணப்படுகின்றது. வாழையினங்களில் மகரந்த சேர்க்கை இடம்பெறாமலேயே விதைகளற்ற கால்கள் சீப்புகளில் உருவாகின்றன. அடுக்கடுக்கான 'சீப்புகள் பூந்தண்டைச் சுற்றிலும் அமைந்திருப்பதை 'வாழைத்தார்' என்பர். ஒருமுறை தார் போட்டதும் அந்த வாழைச்செடி மடிந்து விடும். இதன் அடுத்த சந்ததி கிழங்கிலிருந்தே தோன்றுகின்றது.

வாழை அறுவடைக்குப் பின் எஞ்சிய வாழை மரங்களை வெட்டி நிலத்தில் சாய்த்து மக்கவிடப்பட்டு உரமாகப் பயன்படுத்துவர்.

# முந்திக்கொண்டு முளைத்த மரமுந்திரிகைக்கொட்டை



எம்மத்தியில் எவராவது எதனையாவது முந்திக்கொண்டு செய்தால் உடனே அவருக்கு நாம் முந்திரிகைக்கொட்டை என்று பெயர் சூட்டி விடுகிறோம். அதற்குக் காரணம் இந்த மரமுந்திரிகைப்பழம்தான் (cashew).

பொதுவாக பழவகைகளில் அதன் விதை அல்லது கொட்டை குறிப்பிட்ட பழத்தினுள்ளேதான் காணப்படும். ஆனால், இப்பழத்தில் மாத்திரமே அதன் விதை பழத்தின் வெளியே தள்ளப்பட்டுக் காணப்படும்.





மரமுந்திரிகைப்பழம் ஒரு பொய்க்கனி. பழம் போல தோன்றினாலும் உண்மையில் அது ஒரு பழம் அல்ல. இந்த மரமுந்திரிகைக்கொட்டையின் உள்ளே காணப்படும் முந்திரிகைப் பருப்புகளை பாதுகாக்கும் வகையில் இப்பழத்தின் மேற்றோல் அமைந்துள்ளது. சாதாரணமாக, இப்பழத்தை கையில் எடுக்கும்போது, அப்பழத்தின் மேற்றோலில் காணப்படும் ஒருவகை திரவமானது தோலில் ஒவ்வாமைகளை ஏற்படுத்துகின்றது. எரிச்சலை ஏற்படுத்துவதோடு, கொப்புளங்களை ஏற்படுத்தி புண்கள் ஏற்படவும் காரணமாக அமைகின்றது.

ஆகவே, மரமுந்திரிகைப்பழத்தில் இருந்து முத்திரிகைக்கொட்டையையும் அதன் பருப்பையும் பிரித்தெடுப்பதென்பது மிகவும் கடினமான விடயமே.



அதனாலேயே மூடப்பட்ட சிலிண்டருக்குள் முந்திரிக்கொட்டைகளைப் போட்டு, சிலிண்டரை சூடுபடுத்துவார்கள். அதன்மூலம் அந்த விதை வெடித்து முந்திரி தனியாகப் பிரியும். அல்லது அதனை நெருப்பில் இட்டு சூடாக்கி அதன் கடினமான கோதை பிரித்தெடுப்பர். முந்திரிகைக்கொட்டையில் சுரக்கும் திரவமும் பல்வேறு விதங்களில் பயன்படுகின்றது.

# துதிக்கையில் எலும்புகளற்ற யானை



மனிதனின் பலம் அவனது நம்பிக்கையில். யானையின் பலம் அதன் தும்பிக்கையில் என்று கூறுவர். ஆனால், இந்த யானைகளின் தும்பிக்கையில் எலும்புகளே கிடையாது. எலும்புகள் அற்ற தும்பிக்கையில்தான் யானையின் பலமே அமைந்துள்ளது. அந்தவகையில் யானை தனது தும்பிக்கையினால் ஒன்பது லீட்டர் நீரை உறிஞ்சும். அதேவேளை, யானைகளுக்கு கிட்டப்பார்வை மட்டுமே உள்ளது தொலைதூரத்தில் இருப்பவை அதன் கண்களுக்குத் தெரிவதில்லை.

யானைக்குட்டிகளுக்கு 3 முதல் 5 வயதிற்குள்ளேயே தந்தங்கள் முளைக்கின்றன. ஆனால், அவற்றின் இரண்டு தந்தங்களும் சமமாக அமைவதில்லை. யானை இனங்களில் இந்திய பெண் யானைகளுக்குத் தந்தம் என்பதே கிடையாது. ஆனால், ஆபிரிக்க பெண் யானைகளுக்கு தந்தங்கள் காணப்படுகின்றன. பொதுவாக ஆண் யானைகளுக்கே மதம் பிடிக்கின்றது. பெண் யானைகளுக்கு மதம் பிடிப்பதில்லை.இந்த யானை இனங்களைப் பாதுகாப்பதற்காக இவற்றுக்கென ஒரு மருத்துவமனை இந்தியாவின் கேரள மாநிலத்திலும் இலங்கையின் பின்னவல எனும் இடத்தில் யானைகள் அநாதை இல்லமும் அமைந்துள்ளது. இந்த யானை இனத்தின் ஆண் யானையை 'களிறு' என்றும் பெண் யானையை 'பிடி' என்றும் அழைப்பர். யானை எழுப்பும் ஒலியை 'பிளிறுதல்' என்பர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# சிறிய படங்களை பெரிதாக்கும்போது தெளிவைக் கூட்டக்கூடிய 'மென்பொருள்'...

# அறிமுகமாகிறது ப்ளோஅப் மென்பொருள்





கணினிப் பாவனையாளர்கள் படங்களை (இமேஜ்-image) பயன்படுத்துகையில் சில படங்கள் அளவில் சிறியதாக இருக்கும். இந்த வகையான சந்தர்ப்பங்களில் அவற்றைப் பெரிதாக்கும்போது, அவற்றின் தெளிவு மங்கிவிடுவதுண்டு. எனவே, இத்தகைய குறைகளிலிருந்து மீள்வதற்குப் படத்தை தெளிவாகக் காட்டக்கூடிய புதிய மென்பொருள் ஒன்று அறிமுகமாகியுள்ளது.




இந்த மென்பொருள் 'ப்ளோஅப்' (Blowup) என்று பெயரிடப்பட்டுள்ளது. அதாவது, இந்த 'ப்ளோஅப்' மென்பொருளைக் கணினியானது கொண்டிருந்தால் சிறிய படங்களைப் பெரிதாக்கும்போது (என்லாஜ்-Enlarge) அவை மிகவும் தெளிவாகவே காட்சியளிக்கும்.

குறிப்பாக, எந்தவொரு படமும் சிறிய 'பிக்ஸெல்'களின் ஒன்றிணைவாகவே 'இமேஜ் (படம்) உருவாகின்றது. எனவே, அதிலுள்ள அளவையும் தாண்டி படத்தை பெரிதாக்க முயற்சிக்கும்போது, அதன் 'பிக்ஸெல்' மிகவும் பெரிதாகி படத்தின் காட்சி தெளிவற்றதாகி, மங்கலாகத் தெரிகின்றது. இதற்கமைய, 'ப்ளோஅப்' மென்பொருளைக் கணினியில் இன்ஸ்ட்டோல் செய்திருந்தால் எந்தவொரு சிறிய படத்தையும் அதன் அசல் அளவிலிருந்து 3,200 மடங்கு பெரிதாக்கினாலும் அந்தப் படமானது மிகவும் தெளிவாகவே இருக்கும். ஆகவே, இந்த மென்பொருளானது பிக்ஸெல் நிலையில் உள்ள இமேஜை (படத்தை) 'வெக்டர்' என்ற நிலைக்கு மாற்றிப் படத்தை பெரிதாக்குவதற்கான ஏதுநிலையை ஏற்படுத்துவதே, இந்த மென்பொருள் செய்யும் காரியமாகும். இவ்வாறு 'வெக்டர்' தரத்திலான 'இமேஜை' பெரிதாக்கும்போது, அவை மங்கலாக இருப்பதில்லை. இதனால், அவற்றை 'கலர் எடிட்' செய்வதும் இலகுவாக இருக்கும். இதிலுள்ள இன்னொரு பயன்பாடு என்னவென்றால், சிறிய அளவிலுள்ள படத்தில் ஏதும் குறைபாடுகளோ, அடையாளங்களோ இருப்பின் அந்தப் பகுதியை 'எடிட் செய்து அதனை தரமான, தெளிவான புகைப்படமாக மாற்றிக்கொள்ள முடியும்.




இவ்வாறு 'ப்ளோ அப்' முறையைப் பயன்படுத்துவதற்கு 'ஃபொட்டோ ஷொப்' மென்பொருள் பாவனையிலுள்ள கணினியாக அது இருத்தல் வேண்டும். 'ப்ளோ அப்' இன்ஸ்ட்டோல் செய்துகொண்டதும் 'ஃபொட்டோஷொப்' மென்பொருளை 'ஓப்பன்' செய்யும் பொழுது 'ஃபில் மெனுவிற்குக் கீழே அதனைக் காணமுடியும். இதனூடாக, சென்று இந்த 'புரோகிராமை' ஃபொட்டொஷொப்பின் உள்ளிருந்து ஒப்பன் செய்ய முடியும்.

'ப்ளோஅப்' புரோகிராம் ஆனது 'விண்டோஸ்' மற்றும் மெக்கின்டோஷ் இரண்டிலும் நன்றாகத் தொழிற்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2011, மே மாதம் 11 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday May 11, 2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org